
# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 02 | April 2024 | Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 | Single Copy ₹ 10

எவ்வளவு முயற்சி செய்தும் வெற்றி கிடைக்கவில்லையா, உயர்வு கிடைக்கவில்லையா... நீ

# நம்பிக்கை இழக்காதே!



வாலிபர் உலகம்

# உள்ளே...

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்த தான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.



அவமானம் அலங்காரமாய் மாறியது 04

**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும்
வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?



10 நம்பிக்கை இழக்காதே!



சிப்பிக்குள் முத்து 16



22 சிவப்பு கம்பளம்



இரயில் பயணம் 28




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **மேலும் தொடர்புக்கு 9750955547**

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com





# தலைவாசல்

# நம்பிக்கையோடு காத்திரு !



எல்லோரைப் போலவும் தன்னுடைய 10ம் வகுப்பு படிப்பை பெரிய இலக்கோடு ஆரம்பத்திலிருந்தே நன்கு படிக்க வேண்டும் என்று சொல்லி Time table போட்டு படிக்க ஆயத்தமாக இருந்த மாணவி, முதல் நாளே வீட்டில் மயக்கம் போட்டு விழுந்தாள். உடனே மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. ''மூளை நரம்பில் ரத்த உறைவு போல் காணப்படுகிறது, 5% தான் மூளையால் செயல்பட முடியும், அதிகமாக Strain பண்ணினால் பாதிப்பு ஏற்படும். எனவே புத்தகம் எடுத்து படிக்கவே கூடாது'' என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். இதன் விளைவாக அதிகமான மாத்திரை உட்கொண்டதால் எப்போதும் தூக்கம், மயக்கம் என்று பள்ளிக்கூடத்திற்கே செல்ல முடியவில்லை. 9ம் வகுப்பில் பள்ளியில் முதல் மாணவியாக இருந்தவள் இப்பொழுது ''படிக்க முடியுமா?'' என்ற நிலைக்கு வந்து விட்டாள். இந்த சூழ்நிலையில் 10ம் வகுப்பு Public Exam எப்படி எழுதுவது? பள்ளியிலுள்ள ஆசிரியர்களும், "நீ தேர்வு எழுத வேண்டாம்'' என்று சொல்லி விட்டார்கள். காரணம் இந்த மாணவி exam எழுதி fail ஆனால் பள்ளிக்கு 100% Result பாதித்து விடும். ஆதலால் மிகவும் சோர்ந்து போய் விட்டாள் அந்த மகள். ஒரு நாள் வேதத்தை வாசிக்கும் போது, இயேசு 5 அப்பம் 2 மீனை பெருகச்செய்து 5000 பேருக்கு போஷித்த அற்புதத்தை வாசித்தபோது, இதேபோல் என்னுடைய 5% மூளை செயல்பாட்டையும் இயேசப்பாவால் ஆசீர்வதித்து, அற்புதமாக பெருகச் செய்ய முடியும் என்று விசுவாசத்தோடு ஜெபித்து படிக்க ஆரம்பித்தாள். ஜனவரி மாதம் புத்தகங்களை வாங்கி, ஜெபித்து, எல்லா புத்தகத்திலும், ''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு'' என்று விசுவாசத்தோடு எழுதினாள். மிகுந்த வேதனை மற்றும் பெலவீனத்தின் மத்தியிலும் இயேசப்பா தனக்கு அளித்த பெலத்தைக் கொண்டு எல்லா தேர்வையும் எழுதினாள். Result வந்தது. என்ன ஆச்சரியம்! இந்த மகள் தான் School first, அதுமட்டுமன்றி Hindi subjectல் District 3rd rank வாங்கி, பள்ளிக்கே பெருமை சேர்த்தாள். இன்றைக்கு டாக்டர் பட்டத்தோடு மேன்மை அடைந்து, பல வாலிபர்கள் மத்தியில் தன்னை சாட்சியாக நிறுத்திய இயேசு என்கிற இரட்சகரின் நற்செய்தி அறிவிக்கும் பெரிய பணியை செய்து கொண்டிருக்கிறாள்.



எனக்கன்பான வாலிபர்களே!
இன்றைக்கு பல தோல்விகள், வீழ்ச்சிகளைப் பார்த்து சோர்ந்து போய்விட்டீர்களா?
எழும்பவே முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டீர்களா?
'எவ்வளவு முயற்சி செய்தும் வெற்றி கிடைக்கவில்லையே, எவ்வளவு நம்பிக்கையோடு இருந்தேன் உயர்வு கிடைக்கவில்லையே' என்று மனம் உடைந்து போன உங்களைப் பார்த்து தேவன் சொல்கிறார், "நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண்போகாது". தேவன் உங்களுக்காக வைத்திருக்கிற மேன்மை, உயர்வு மற்றும் ஆசீர்வாதம் நிச்சயம் உங்களை வந்து சேரும்.

எனவே தொடர்ந்து விசுவாசத்தோடு ஜெபியுங்கள், முழு பெலத்தோடு முயற்சி செய்யுங்கள், தேவன் உங்களை ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துவார்! தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!!

கிறிஸ்துவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்

சாட்சி தொகுப்பு: பெனிட்டா



# அவமானம் அலங்காரமாய் மாறியது!

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, சிறு வயதிலேயே சுவிசேஷம் அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்ததோடு, நன்றாகக் படித்து இன்றைக்கு வழக்கறிஞராக உருவெடுத்திருக்கும் சகோதரி ஜாய்ஷா படித்துக்கொண்டே, கர்த்தருடைய ஊழியத்தையும் செய்து வருகிறார்கள். கர்த்தர் இவர்களை வழிநடத்தி வந்த பாதைகளைப் பற்றி அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்வோமா!

## சிறுவயதும் குடும்பமும்

நான் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரவநல்லூர் என்னும் ஊரில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து ஆவிக்குரிய வாழ்வில் வளர்க்கப்பட்டேன். எனது தாயார் ஆசிரியராக பணியாற்றிக்கொண்டு, கிராம ஊழியமும் செய்து வருகிறார்கள். வெளிநாட்டில் வேலை செய்து வந்த எனது தகப்பனார் 2020ம் ஆண்டுக்குப் பிறகு எங்களோடு இருக்கிறார். எனக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் இருக்கிறார்கள். எனது தாயார் ஊழியம் செய்வதால் நானும் எல்லா ஜெபங்களிலும் கலந்து கொள்வேன். என்னுடைய 8வது வயதில் தேவன் என்னை தம்முடைய ஆவியினால் நிரப்பினார். 5ம் வகுப்பு படிக்கும் போது நான் என்னுடைய வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு சுவிசேஷம்






சொன்னதினால் 'இப்படி சொல்லக் கூடாது' என்று என்னை எனது ஆசிரியர் கடிந்து கொண்டார். என்னுடைய தோழியிடம் இயேசுவை அறிவித்ததினால் கன்னத்தில் அடி வாங்கினேன். ஆனால் அவர்கள் குடும்பமாக இரட்சிக்கப்பட்டார்கள் என்பது சில வருடங்களுக்கு பிறகு தெரிய வந்து கர்த்தரை துதித்தேன்.

நான் 6ம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும்போது எங்களுடைய ஆலயத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் அந்நிய பாஷை வரத்தை தேவன் எனக்கு தந்தார். அதன் பிறகு என் நண்பர்கள் மற்றும் எங்கள் கிராமத்தை குறித்த பாரம் அதிகமானது. அநேக முகாம்களில் நாங்கள் குடும்பமாய் கலந்து கொள்வோம். 2013ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஊழியர் பயிற்சி முகாமில் மோகன் Uncle ஜெபவேளையில் ''நீங்கள் எங்கே ஊழியம் செய்ய வேண்டும் என்பதை தேவன் உங்களுக்கு காண்பிப்பார்'' என்று சொல்லி அந்த வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ளும் வரை ஜெபிக்க வைத்தார். அப்போது

தேவன் எனக்கு, நான் எங்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று மூன்று கிராமங்களை காண்பித்து அதற்கென்று என்னை அபிஷேகம் பண்ணினார்.

## ஊழிய பாதை



ஆவியானவரின் துணையோடு கிராமங்களில் சென்று ஊழியம் செய்ய ஆரம்பித்தோம். தேவன் எல்லாவற்றையும் வாய்க்கப் பண்ணினார். அதில் ஒரு கிராமத்தின் மக்கள் மிகவும் வன்முறையாளர்களாய் இருந்தபடியால் அங்கு ஊழியம் செய்வது மிகவும் கடினமாய் இருந்தது. ஆனால் தேவனின் வழிநடத்துதலின்படி சென்றதால் எந்த தீங்கையும் நாங்கள் அங்கு பார்க்கவில்லை. சில நாட்கள் சென்ற பின்பு சில எதிர்ப்புகள் எழும்பின. ஜெபத்தில் ஆண்டவருக்கு தெரியப்படுத்தினோம், கர்த்தருடைய ஆலோசனையின்படி நாங்கள் செயல்பட்டதால், ஆண்டவர் எல்லா தடைகளையும் மாற்றி நாங்கள் அந்த கிராமத்தில் 2½ வருடங்கள் ஊழியம் செய்ய கிருபை தந்தார்.

எனது பள்ளி பருவத்தில் **Sunday class** ஊழியம் செய்து வந்தேன். அதோடு ஆண்டவர் குறிப்பிட்டு காண்பிக்கிற அரண்களை கட்டி ஜெபிக்க ஜெப நடை சென்று வருவேன். அந்த ஜெபத்தின் மூலம் பிசாசின் கிரியைகள் முறிக்கப்படுவதை ஆண்டவர் எங்கள் கண்களால் காணும்படி செய்தார். கல்லூரி படிக்கும் போது **tuition** எடுத்ததோடு, தினந்தோறும் 3 கி.மீ சைக்கிளில் சென்று சுவிசேஷ ஊழியமும் செய்ய கிருபையும் பெலனும் தந்தார். 2014ம் ஆண்டிலிருந்து கிறிஸ்மஸ் தினத்தன்று **Santa**வோடு **tracts** மற்றும் **cake** கொடுத்து அநேகருக்கு நற்செய்தி அறிவிக்க இதுவரை கிருபை தந்து நடத்தி வருகிறார். அநேக கூடுகைகளை ஒருங்கிணைந்து செய்யவும் தேவன் கிருபை செய்து வருகிறார்.



## படிப்பு

எனது பத்தாம் வகுப்பில் ஏதாவதொரு பாடத்தில் 100/100 மதிப்பெண் எடுக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ''கர்த்தர் உன் மனவிருப்பத்தின்படியே உனக்கு செய்வார்'' என்ற வார்த்தையின்படியே அறிவியல் பாடத்தில் 100/100 மதிப்பெண்கள் எடுக்கவும், 445/500 மதிப்பெண்கள் கொடுத்து தேவன் என்னை ஆசிர்வதித்தார். என் திறமையினாலோ, நான் படித்ததாலோ இது கிடைத்ததல்ல. தேர்வு நாட்களில் விடுதலை பெருவிழா போன்ற கூடுகைகள் நடைபெற்றபோது அந்த கூடுகைக்கான எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, இரவு 12 மணிக்கு மேல் போய் தேர்வுக்காக படிப்பேன். அந்த பிரயாசங்களை தேவன் பார்த்து, கர்த்தர் எனக்கு இந்த வெற்றியைக் கொடுத்தார்.

11வது வகுப்பில் நான் என்ன **group** எடுக்க வேண்டுமென்று தேவனிடம் கேட்டபோது, **computer science group** எடுக்க வேண்டுமென்று தேவன் அவர் சித்தத்தை வெளிப்படுத்தினார். ஆனால் நானோ என் விருப்பத்தின்படி **Biology** குரூப் எடுத்து படித்ததால், அதில் சரியாக படித்து நல்ல மதிப்பெண்கள் எடுக்காமல் மிகவும் அவமானப்பட்டேன். தேவ சித்தத்தை மீறி நான் என் சுயவிருப்பத்தின்படி நடந்து கொண்டதால் இவ்விளைவுகளை சந்திக்க நேரிட்டது. எனவே ''நீங்க என்ன சொன்னாலும் செய்வேன்'' என்று ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டு அர்ப்பணித்து ஜெபித்ததால், என்னுடைய 12ம் வகுப்பில் தேவன் வெற்றியைக் கொடுத்தார். கல்லூரியில் என்ன படிக்க வேண்டுமென்று ஜெபித்த போது ''**B.A History** எடுத்து படிக்க வேண்டுமென்று அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். ஆண்டவருடைய சித்தத்தின்படி **B.A History** எடுத்து படிக்கவும் **university**யில் 4வது **rank** வாங்கவும் கர்த்தர் உதவி செய்தார். தேவனின் சித்தப்படி நான் படித்ததினால் தேவ நாமம் மகிமைப்பட்டது.



சகோதரி ஜாய்ஷா தன் குடும்பத்தினருடன்

UG இறுதி ஆண்டில் அடுத்து நான் உயர்கல்வி படிக்க வேண்டுமா, அல்லது வேலைக்கு செல்ல வேண்டுமா என்று ஜெபித்துக் கொண்டிருந்த போது, ஒரு ஊழியர் மூலமாக வழக்கறிஞருக்கு படிக்க வேண்டுமென்று என்னோடு பேசினார். அதை தேவ சமூகத்தில் வைத்து காத்திருந்து ஜெபித்த போது எஸ்தர் 10:3ம் வசனத்தின் மூலம் பேசி 'சமாதானம் உண்டாக பேசுகிறவனுமாயிருந்தான்' என்று மொர்தெகாய்க்கு சொல்லப்பட்ட அந்த வார்த்தையின்படி நீ எழுப்புதல் நாட்களில் சமாதானம் உண்டாக பேசுகிறவளாய் இருக்க வேண்டுமென்று என்னோடு பேசினார்.

அதன்படி திருநெல்வேலி law கல்லூரியில் LLB படிக்க உதவி செய்தார். இப்போது நான் LLB படித்து முடித்து 2023 ஆம் ஆண்டு முதல், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பை courtல் வழக்கறிஞராக practice பண்ணிக் கொண்டிருக்கிறேன். அதோடு கூட அநேக ஊழியங்கள் மற்றும் ஜெபங்களில் தவறாமல் கலந்துகொண்டு கர்த்தருக்காக பகுதிநேரமாக ஊழியம் செய்து வருகிறேன்.

## வாலிபர்களுக்கு சொல்ல விரும்புவது!




நான் படித்ததினாலோ என்னுடைய திறமையினாலோ இந்த மேன்மை எனக்கு வரவில்லை. கர்த்தருடைய சித்தத்தை அவர் விரும்புகிறபடி ஆவியானவரின் நடத்துதலோடு செய்தபடியினால்க், இந்த மேன்மையைத் தந்தார். நீங்களும் ஆண்டவருடைய ஊழியத்திற்கு முதல் இடம் கொடுத்து, செய்யும்போது கர்த்தர் உங்கள் படிப்பையும், எதிர்காலத்தையும் ஆசீர்வதிப்பார்.

**அன்பான வாலிபர்களே! சிறுவயதில் ஊழியம் செய்து பல அவமானங்களை அடைந்தபோதிலும், ஊழியத்தைத் தொடர்ந்து செய்து இன்றைக்கு ஒரு மேன்மையான நிலையை அடைய ஜாய்ஷாவால் முடியுமானால் உங்களையும் உயர்த்தி மேன்மைப்படுத்த அவரால் முடியும்.**


ஆந்திரா மாநிலம் - திருப்பதியில்

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

நாள் : ஏப்ரல் 7 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 4 மணி
முதல் இரவு 7 மணி வரை

இடம் : உலக எழுப்புதல் ஜெப மையம்,
அன்லிமிடேட் Show room எதிரில்,
திருப்பதி.



செய்தியும் ஜெபமும் :
சகோ. சதீஷ்குமார்

தொடர்புக்கு - 79892 95442 | 94889 38305

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதாகம புருஷர்களின் பெயர்களை சீர்ப்படுத்தி, தேவன் அவர்களை அழைக்கும் முன்பு என்ன செய்தார்கள் என்பதை கட்டத்திற்குள் நிரப்பவும்.

## வினாக்கள்

| பெயர்கள் | தொழில் |
|---|---|
| 1. சேமோ ( ) | [redacted] |
| 2. ல்சவு ( ) | [redacted] |
| 3. தேமயுத் ( ) | [redacted] |
| 4. வீதாது ( ) | [redacted] |
| 5. சாஎலி ( ) | [redacted] |
| 6. யோதின்கி ( ) | [redacted] |
| 7. வேசால்மு ( ) | [redacted] |
| 8. ஸ்ஆமோ ( ) | [redacted] |
| 9. துருபே ( ) | [redacted] |
| 10. ல்பவு ( ) | [redacted] |

**கடந்த மாத வெற்றியாளர்:**

சகோ. ரிச்சர்ட், (கும்பகோணம்)

அவர்களை வாழ்த்துகிறோம்.




பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.04.2024

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

### கடந்த மாத விடைகள்

1. 4 (யோவான் 19:23)
2. யோனா (மத்தேயு 12:38-41)
3. மார்த்தாள் (யோவான் 11:21-25)
4. மகதலேனா மரியாள், மரியாள், சலோமே (மாற்கு 16:1)
5. வாழ்க (மத்தேயு 28:9)
6. நம்பவில்லை (மாற்கு 16:11; லூக்கா 24:11)
7. கலிலேயா (மத். 28:16)
8. 10
9. 8 நாட்கள் (யோவான் 20:26)
10. சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் (மாற்கு 16:15)

Heart Beat

ஆலோசனை: அவி



# உன்னால் முடியும்!

**நான் ஒரு நல்ல கல்லூரியில் UG படிப்பை முடித்தேன். தொடர்ந்து MBA படிப்பையும் சிறந்த முறையில் படித்து முடித்தேன். நான் படித்து முடித்து ஒரு பெரிய கம்பெனியில் உயர்ந்த பதவியில் அமர்வதே என் கனவு. ஆனால் எந்த கம்பெனியிலும் நான் எதிர்பார்த்த சம்பளம் கிடைக்கவில்லை. இப்படி பல கம்பெனிகளில், பல வாய்ப்புகளை தவற விட்டேன். பின்னர் சொந்த காலில் நிற்க தொழில் ஆரம்பித்தேன், ஆனால் அதிலும் எந்த பலனும் இல்லாமல், நஷ்டம் தான் அடைந்தேன். தற்பொழுது என் மேற்படிப்பிற்காக வாங்கிய Bank Loanயும் அடைக்க முடியவில்லை, Business செய்ய வாங்கிய கடனையும் அடைக்க முடியவில்லை, மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதனால் அவ்வப்போது மன உளைச்சலுக்குள்ளாகி விடுகிறேன். நல்ல சம்பளத்தில் வேலைப் பார்த்து, உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று நினைத்தது தவறா? ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது. நான் சிகரத்தை அடைய என்ன செய்ய வேண்டும், உதவி செய்யுங்கள். – ராகுல், பெங்களூர்.**

அன்பு தம்பி ராகுல், உங்களின் கடிதம் படிப்பதற்கு சற்று வேதனையாகவும், வருத்தமாகவும் இருந்தது. ராகுல் உங்களின் நோக்கமும், திட்டமும் மிகவும் உயர்ந்ததாக இருந்தாலும், அதின் செயல்முறையும், அந்த உயரத்திற்கு செல்வதற்கான வழிமுறையும் சீராக இல்லாதபடியால், வெற்றி இலக்கை அடைய முடியவில்லை.

நல்ல கம்பெனியில் உயர்ந்த பதவியில் அமர வேண்டும் என்ற எண்ணம் தவறு இல்லை. ஆனால் எடுத்தவுடன் உயர்பதவிக்கு செல்ல வேண்டும் என்று அவரசப்பட்டது சற்று தவறான செயல். ஒருவேளை நீங்கள் உங்களுக்கு கிடைத்த முதல் வேலையில் அமர்ந்து, வேலை செய்துக் கொண்டே சில அனுபவங்களைப் பெற்ற பின் வேறு கம்பெனிக்கு சென்றிருந்தால் அந்த அனுபவத்தை வைத்து நல்ல சம்பளம் கிடைத்து படிப்படியாக முன்னேறி சென்றிருக்கலாம். அந்த வாய்ப்பை தவற விட்டீர்கள் என்பதே வருந்தத்தக்கது. ராகுல், இன்றைய சூழலில் படித்த பட்டதாரிகளுக்கு வேலை கிடைப்பதும், அவர்களுக்கு பிரியமான துறையில் வேலை செய்வதும் அபூர்வமான ஒன்று. உங்களுடைய எதிர்பார்ப்புக்கு கம்பெனியும், வேலையும் அமையாது. மேலும் நீங்கள் விரும்பும் சம்பளமும் கிடைக்காது. ஒரு கம்பெனியில் வேலைக்கு ஆள் எடுக்கும் போது, அனுபவம் இல்லாத **Fresher'sக்கு** சம்பளம் குறைவு தான், ஆனால் அனுபவமும் திறமையும் அதிகம் இருக்கும் போது சம்பளத்தை நீங்கள் **demand** செய்யலாம்.

Biharஐ சேர்ந்த Babli Kumari ஒரு சாதாரண Police Constableஆக தன்னுடைய பணியை ஆரம்பித்தார்கள். ஆனால் உயர்ந்த பதவியில் அமர வேண்டும் என்ற முயற்சியோடே BPSC (Bihar Public Service Commission) Exam எழுதி, தன்னுடைய 3rd attemptல் clear செய்து ஒரு DSPஆக வலம் வந்துக் கொண்டிருக்கிறார்கள். முதலில் Short term goal - govt service, ஒரு police constable ஆனார்கள். இரண்டாவதாக, High position செல்ல BPSC Exam எழுத முயற்சித்து, மூன்றாம் முறை வெற்றிப் பெற்றார்கள்.



ராகுல், நம் வாழ்வில் உடனே உயரம் செல்ல நினைப்பது, ஒரு சரியான வளர்ச்சியாக இருக்காது. மேலும் உங்களுக்கு அனுபவம் இல்லாத தொழிலில், அதிக முதலீடு செய்து நஷ்டம் அடைந்தது உங்களின் அடுத்த சரிவு. ஒரு தொழிலை செய்வதற்கு முன்னால் அதை நன்கு கற்றறிந்த பின்னரே அந்த செயலில் இறங்க வேண்டும். அவசரத்தில் செய்யும் ஒரு காரியம், பல நேரங்களில் ஆபத்தில் தான் முடியும்.

## தோல்விகளை படிக்கல்லாக்கி நீங்கள் சாதிக்க சில டிப்ஸ்

**01** முதலில் உங்கள் CAREERல் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள் என்பதை அறிய வேண்டும்.

**02** ஒரு வேலையில் அமர்ந்து உயர விரும்பினால், அதில் சில ஆண்டுகள் இருந்து, முழு வேலையையும் கற்றுக் கொள்ள வேண்டும், பின்னர் ஒவ்வொரு படியாக முன்னேற முயலுங்கள்.

**03** வேலைக்கு சென்றால் சம்பளத்தைவிட, அனுபவத்தையும், அணுகுமுறைகளையும், கற்று கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**04** உங்களால் முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட ஆரம்பியுங்கள். முதலில் ஒரு வேலையில் அமர்ந்து, அனுபவங்களைப் பெற்றிட முயலுங்கள், பின்னர் உயர்வை நோக்கி செல்ல முயலுங்கள்.

இன்றைக்கு பல சாதனைகளை செய்த எல்லோரும் பேரும் சோர்வு, தோல்வி, அவமானம், நிந்தை, புறக்கணிப்பு, இழப்பு என்ற அத்தனை தடைகளையும் தாண்டி தான் சாதனை என்ற வெற்றிப்படிக்கட்டில் ஏறி இருக்கிறார்கள். எனவே தொடர் தோல்விகள் மற்றும் வாய்ப்பின்மையை நினைத்து சோர்ந்து போக வேண்டாம். திருமணமாகி, ஒரு குழந்தையை வைத்துக் கொண்டே போலீஸ் வேலையும் செய்து, உயர்படிப்பு படித்து ஒரு பெண் **DSP**ஆகி சிகரத்தில் எழும்பி சாதிக்க முடியும் என்றால், உங்களாலும் சாதிக்க முடியும் என்று நம்பிக்கையோடு செயல்படுங்கள்.

நிச்சயமாக உங்களுக்கு ஒரு முடிவு உண்டு, உங்கள் தோல்வி வெற்றியாக மாறும். இப்படி தோல்வியுற்று சோர்ந்து போய், 'நான் உபயோகமற்றவன், தோல்வி அடைந்தவன்' என்று மூலையில் முடங்கிய அநேகரை எழுப்பி செயல்பட வைத்து, சாதிக்க வைத்த இயேசு உங்களுக்கும் உதவி செய்வார். நீங்களும் ஒரு நாளில் சாதனையாளராக மாற முடியும்.

**ஜெபத்துடன் முயற்சி செய்யுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கு உதவி செய்வார். உங்கள் நம்பிக்கை வீண் போகாது!**

முகப்பு செய்தி: சதீஷ்

# நம்பிக்கை இழக்காதே!



நம்முடைய வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணமும் செயல்பாடும் இருக்கும் போது ''உன்னால் முடியாது, இது உனக்கு தேவையில்லாத வேலை'' என்று சொல்லி முட்டுக்கட்டை போடுவதற்கு அநேகர் வருவார்கள். இப்படி எத்தனை பேர் வந்து எதிர்மறையாகப் பேசினாலும் நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ, நம் மனம் என்ன செய்ய துடிக்கிறதோ, இவற்றில் தெளிவான இலக்குகளும், திட்டங்களும் அத்துடன் திடமான மனஉறுதியும் இருந்தாலே வாழ்க்கையில் வெற்றி பெற்று விடலாம். உங்கள் சூழ்நிலை எதுவாக இருந்தாலும், நம்பிக்கை இழக்காமல் இருந்தால் நீங்கள் நிச்சயம் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.




விருதுநகர் மாவட்டம் திருத்தாங்கல் என்ற கிராமத்தில் பிறந்தவர் R.G. சந்திரமோகன். குடும்ப சூழ்நிலையின் நிமித்தம் தொடர்ந்து படிக்க முடியாமல் தன்னுடைய பள்ளிப் படிப்பை பாதியிலேயே விட்டு விட்டார். 1970ஆம் ஆண்டுகளில் சாமானிய மக்களுக்கு எட்டாக் கனியாக இருந்த Ice Creamஐ எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் விருப்பமும் இவருக்கு இருந்தது. தன் கையில் இருந்த சிறிய தொகையை வைத்து நம்பிக்கையோடு Ice-cream தயார் செய்து விற்பனை செய்ய ஆரம்பித்தார். கடுமையான உழைப்பு மற்றும் விடாமுயற்சியால் Hatsun Agro Product Ltd., என்ற கம்பெனியை நிறுவினார். இதன் மூலம் சாமானிய மக்களும் Ice Cream சாப்பிட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட Arun Ice Cream இன்று இந்தியா முழுவதும் எல்லாத் தெருக்களிலும் கிடைக்கிறது. இதுமட்டுமின்றி ஹட்சன் தயிர், ஐபாக்கோ ஐஸ்கிரீம், ஆரோக்கியா பால், HAP daily என்று இத்துறையில் சாதித்துக் கொண்டே இருக்கிறார். தன்னுடைய முன்னேற்றத்துக்கு எத்தனையோ தடைகளும் சவால்களும் வந்த போதும், நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்து முன்னேறி வாழ்க்கையில் வெற்றி பெற்று இருக்கிறார்.

நீங்கள் பள்ளி அல்லது கல்லூரி படிப்பை முடித்துவிட்டு, வாழ்வின் அடுத்தக்கட்ட முன்னேற்றத்திற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அநேக தடைகளும் போராட்டங்களும் வந்தாலும் கொஞ்சம்கூட மனம் தளராமல் நம்பிக்கையோடு உங்கள் வாழ்க்கையின் இலக்கை நோக்கி ஓடுங்கள்; நிச்சயம்



வெற்றி பெறுவீர்கள். ஆண்டவரே, **“...உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்;...”** (சங். 143:8) என்று இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து செயல்பட ஆரம்பியுங்கள், அவர் உங்களை கைவிடவே மாட்டார்.

கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும் ஜனம் பாக்கியமுள்ளது, அவர்களின் நம்பிக்கை ஒரு போதும் வீண் போகாது என்று வேதம் சொல்கிறது. ஜீவனுள்ள தேவன் மீது வைக்கும் நம்பிக்கை ஒரு போதும் நம்மை வெட்கப்படுத்தாது. **“கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்”** (எரே. 17:7). தன் வாழ்க்கையைக் குறித்த பெரும் எதிர்பார்ப்போடு இருந்த யோசேப்பின் வாழ்வில் எல்லாம் எதிர்மறையாகவே இருந்தது. தன் சொந்த சகோதரர்களால் எகிப்து தேசத்துக்கு விற்கப்பட்ட போதும், நியாயமில்லாமல் குற்றம் சாட்டப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட போதும், அவன் நம்பிக்கை இழக்காமல் தேவனை விசுவாசித்தான். தேவன் மீது யோசேப்பு வைத்த நம்பிக்கைதான் அவனை சிறைச்சாலையிலிருந்து எகிப்தின் அரண்மனைக்கு கொண்டு சென்றது. எத்தனை தடைகள் அவமானங்கள் நிந்தனைகள் வந்த போதும், அவன் தேவன் மீது வைத்த நம்பிக்கையை கைவிடவே இல்லை. ‘‘என் இருதயம் அவரை (இயேசு) நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்’’ (சங். 28:7) என்ற வேத வாக்கின்படி யோசேப்பு தன்னுடைய வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்து வெற்றி பெற்றான். சூழ்நிலை எப்படி இருந்தாலும் மனம் தளர்ந்து போகாதீர்கள், யோசேப்பைப் போல இயேசுவின் மீது நம்பிக்கை வையுங்கள். அவர் நிச்சயம் உங்களை உயர்த்துவார்.

உங்கள் எதிர்காலம், படிப்பு, வேலை இவை எல்லாவற்றிலும் கர்த்தர் துணை நின்று உங்களுக்கு உதவி செய்வார். நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான், **“உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்”** (சங். 37:5) என்ற வார்த்தையின்படி உங்கள் வாழ்வை முற்றிலுமாய் அவர் கையில் ஒப்புக்கொடுத்து விட்டு நம்பிக்கையோடு காத்திருங்கள். அவர் உங்கள் சூழ்நிலைகள் எல்லாவற்றையும் மாற்றி காரியங்களை வாய்க்கச் செய்வார்.

**எனக்கன்பான வாலிபர்களே, எந்தவொரு சூழ்நிலையிலும் உங்கள் நம்பிக்கையை இழந்து போகாதீர்கள். நம்பிக்கையற்ற இவ்வுலகில் ஒவ்வொருநாளும் பலவிதமான போராட்டங்கள் உங்களை சூழ்ந்து இருந்தாலும் ஒன்றுக்கும் கவலைப்படாமலும், சோர்ந்து போகாமலும், எந்தவிதமான எதிர்மறையான எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமலும், “நான் நம்புகிறது அவராலே வரும்” (சங். 62:5) என்று தேவன் மீது நம்பிக்கையாய் இருங்கள். அவர் உங்களை வெட்கப்பட விடமாட்டார்!**

மார்த்தாண்டத்தில்...
இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்
வாலிபர் எழுப்புதல் கூடுகை



நாள் : மே 1 (புதன்கிழமை)
நேரம் : மாலை 5 மணி முதல் 8 மணி வரை
இடம் : நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி, மார்த்தாண்டம்
செய்தியும் ஜெபமும் : சகோ. சாம் ஜெபராஜ், சகோ. அவினாஷ்
தொடர்புக்கு : 98651 89883 | 7598155503



# பயப்படாதே வெற்றி உனதே!



செய்தி: மோகன் சி. லாசரஸ்



**"நான் பயப்படாமல் நம்பிக்கையாக இருப்பேன்"** (ஏசாயா 12:2).

2 நாளாகமம் 20ம் அதிகாரத்தை வாசிக்கும் போது, யோசபாத் என்ற இராஜாவைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. யோசபாத் இராஜா தேவனுக்கு பயந்து ஆண்டவருக்குப் பிரியமாக வாழ தன்னை அர்ப்பணித்து, இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தார். திடீரென்று ஒருநாள் மூன்று இராஜாக்கள் அவருக்கு விரோதமாக ஒன்று சேர்ந்து பெரும் படையோடுகூட, இவரை எதிர்த்து வீழ்த்தி விட யுத்தம் பண்ண புறப்பட்டு வருகிறார்கள். அது ஒரு பெரிய சேனையாக இருந்தபடியினால் இவரால் அவர்களோடு யுத்தம் பண்ணி ஜெயிக்க முடியாத அந்த சூழ்நிலையை அவர் நினைத்த போது முதலாவது அவருக்குள் ஒரு பயம் உண்டாயிற்று. ''எப்படி இவ்வளவு பெரிய திரள் கூட்டத்தை நான் ஜெயிக்க முடியும்? எதிராளிகள் பக்கத்தில் வந்து விட்டார்கள், யுத்தம் செய்ய வேண்டிய அவசியம் வந்து விட்டது, நாம் வெற்றி பெற என்ன செய்வது?'' என்று யோசபாத் பயப்படுகிற சூழ்நிலை வந்தவுடன், அவர் உபவாசம் பண்ணி ஜெபம் பண்ணலாம் என்று தன் தேசத்தின் மக்கள் எல்லோரையும் எருசலேமில் கூடிவரச் செய்கிறார்.

உடனே திரள் கூட்ட மக்கள் எருசலேமில் கூடிவிட்டார்கள். எல்லோரும் ஒருமனமாக சேர்ந்து ஜெபம் பண்ணுகிறார்கள். **'இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எனக்கு பெலனில்லை; எனக்கு என்ன செய்வதென்றும் தெரியவில்லை; ஆகவே என் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது'** (2 நாளா. 20:12) என்று யோசபாத் கர்த்தரை நோக்கி அற்புதமான ஒரு ஜெபம் பண்ணுகிறார். ''என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது, நீர் எனக்கு ஜெயம் கொடுக்க முடியும்; நீர் எனக்கு உதவி செய்ய முடியும்; இந்த பெரிய யுத்தத்தில் நீர் எனக்கு வெற்றி கொடுக்க முடியும்; என் பெலத்தினால் அல்ல, என்னுடைய முயற்சினால் அல்ல; என்னால் செய்ய முடியாது என்கிறதை அறிந்திருக்கிறேன், ஆனால் நீர் எனக்கு உதவி செய்ய முடியும்'' என்று அவர் ஜெபம் பண்ணுகிறார். அந்த ஜெபம் காரியங்களை தலைகீழாக மாற்றி கர்த்தர் அற்புதமான வெற்றியைக் கொடுத்தார் என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஒரு பெரிய ஜெயத்தைக் கொடுத்தார்.



யோசபாத் ஜெபம் பண்ணும் வரைக்கும் அந்த பயம் அவருக்குள் இருந்து கொண்டிருந்தது. அந்த ஜெபத்திற்கு பிறகு தைரியமாக யுத்தத்தை சந்திக்கப் புறப்படுகிறார். ஏனென்றால் **"நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும்**



**கலங்காமலும் இருங்கள்"** (2 நாளா. 20:15) என்று கர்த்தர் வாக்குக் கொடுத்துவிட்டார். புறப்பட்டு வந்திருக்கிற அந்த பெரிய இராணுவத்தைக் குறித்து நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்திருக்கிற திரள் கூட்டத்தைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம். அதுதான் கர்த்தர் சொன்ன முதல் வார்த்தை. பயத்தை உள்ளத்தை விட்டு கர்த்தர் எடுத்து விட்டார்.



நீங்கள் எழுதப் போகிற, எழுதி இருக்கிற தேர்வு ஒரு பெரிய யுத்த களம். யோசபாத்தைப் போல உள்ளத்தில் ஒரு கலக்கத்தோடுகூட நீங்களும் இருக்கலாம். ''நான் வெற்றி பெறுவேனா? எப்படி நான் இந்த பாடத்தில் இவ்வளவு மார்க் எடுக்க முடியும்? எப்படி நான் இந்த பாடத்தில் வெற்றி பெற முடியும்? இதுவரைக்கும் அதில் தோல்வியைதான் நான் கண்டிருக்கிறேன்'' என்ற ஒரு பயம் உங்கள் உள்ளத்தில் எழும்பியிருக்கலாம். அன்று பயத்தோடு இருந்த யோசபாத் கர்த்தரிடத்தில் ஜெபித்தது போல நீங்களும் ஜெபிக்கலாம், உங்கள் காரியங்களை மனந்திறந்து சொல்லலாம். ''எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது. நீர் எனக்கு ஜெயம் கொடுக்க முடியும். நீர் எனக்கு உதவி செய்ய முடியும்'' என்று கர்த்தரிடத்தில் நீங்கள் சொல்லும்பொழுது அவர் உங்களுக்கு ஜெயத்தைத் தருவார். யோசபாத்துக்கு வெற்றியைக் கொடுத்த கர்த்தர் உங்களுக்கும் வெற்றியைத் தருவார். ''நான் பயப்படாமல் நம்பிக்கையாக இருப்பேன்'' என்று சொல்லுங்கள்.

''நான் பயப்பட மாட்டேன்'' என்கிற ஒரு அனுபவத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படி அதை பெற்றுக் கொள்வது? சூழ்நிலையைப் பார்க்கும் போது பயம் உள்ளத்தில் வரும்; ஆனால் வேதத்தை நீங்கள் பார்க்கும் பொழுது 365 இடங்களில் திரும்ப, திரும்ப ''நீ பயப்படாதே/பயப்படாதிருங்கள்'' என்ற வார்த்தையை கர்த்தர் சொல்கிறார். அதாவது ஒவ்வொருநாளும், 'நீ பயப்படாதே மகனே, நீ பயப்படாதே மகளே' என்று சொல்கிறார். நாம் பயப்படுவதை கர்த்தர் விரும்பவில்லை. காரணம் என்ன தெரியுமா, பயம் வேதனையுள்ளது. பயம் உங்கள் இருதயத்தை பாதிக்கும். இந்த பயம்தான் உங்கள் படிப்பைத் தடுக்கிறது, இந்த பயம்தான் உங்கள் வெற்றியைத் தடுக்கிறது, ஆகவேதான் பயப்படாதிருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

இயேசு பிறந்தவுடன் தேவதூதர்களால் இந்த உலகத்திற்கு சொல்லப்பட்ட செய்தி, 'பயப்படாதிருங்கள், உங்களுக்காக இரட்சகர் பிறந்திருக்கிறார்' (லூக்கா 2:10) என்பதாகும். இயேசு மரித்து உயிர்த்தெழுந்தவுடன் இந்த உலகத்திற்கு சொல்லப்பட்ட முதல் செய்தியும் அதுதான், 'பயப்படாதிருங்கள்' என்பதாக.

உங்கள் உள்ளத்தில் பயம் வர காரணம் என்ன? யோசித்துப் பாருங்கள்! இதுவரை நீங்கள் சரியாக படிக்காமல் உங்கள் நேரத்தை வீணாக்கினீர்கள், சோம்பலுக்கு இடம் கொடுத்தீர்கள், தவறான நண்பர்களுக்கு இடம் கொடுத்து படிக்க வேண்டிய நேரத்தை நீங்கள் தவற விட்டபடியினால் இன்றைக்கு பயம்.

சரி இந்த பயம் எப்படி விலகும்? எப்போது விலகும்?

நீங்கள் செய்த இந்த தவறுகளை உணர்ந்து ''இயேசுவே என்னை மன்னியும். நான் தவறு செய்து விட்டேன், நான் என் கடமையை சரியாக நிறைவேற்றவில்லை, படிக்க வேண்டிய நேரத்தில் நான் படிக்கவில்லை, TV மற்றும் செல்போன் பார்த்துக்கொண்டு நான் வீணாக என் நேரத்தை செலவழித்து விட்டேன், என்னை மன்னியும்'' என்று உங்கள் குறைகளை உணர்ந்து ஆண்டவரிடத்தில் தவறை அறிக்கையிடும்பொழுது கர்த்தர் மன்னித்து அந்த பயத்தை உங்களை விட்டு மாற்றுவார்.

**அன்பான வாலிபர்களே! தேர்வு முடிவைக் குறித்த பயத்தை இயேசு மாற்றி விட்டார். கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்கும்போது கட்டாயம் வெற்றி நிச்சயம். "நான் ஜெயிப்பேன், வெற்றி பெறுவேன், சாதிப்பேன், இயேசு என்கூட இருக்கிறார்" என்கிற தைரியத்தோடு தேர்வு முடிவை எதிர்பாருங்கள் கர்த்தர் அற்புதம் செய்வார்!**

TECH - 3

தகவல்: காட்வின்

# கைபேசியை கையாளு!

## Hello நண்பர்களே...!


நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு பல வழிமுறைகளை தேடித் தேடி பின்பற்றி வாழ்கிறோம். ஆனாலும் இந்த நவீன உலகில் நாம் யாரோ ஒருவரால் கண்காணிக்கப்படுகிறோம் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும். நாம் பேசும் போதும் நடக்கும் போதும் யாரோ ஒருவரால் நாம் கண்காணிக்கப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறோம்.



1 பேதுரு 5:8ல் **“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”** என வேத வசனம் நம்மை எச்சரிக்கிறது. எனவே நாம் எல்லாவற்றிற்கும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும் விழித்து இருப்பவர்களாயும் இருக்க வேண்டும். மத்தேயு 10:16ல் **“சர்ப்பங்களைப் போலவினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்”** என்று ஆண்டவராகிய இயேசுவும் நமக்கு கற்று தருகிறார்.




கைபேசியை கையாளும் நாம் அதை கவனமாகக் கையாள வேண்டும். கைபேசியில் நாம் ஒரு app install செய்யும் போது அதில் permission கேட்டு popup வரும் அந்த நேரம் நாம் கவனக்குறைவாக எல்லாவற்றிக்கும் allow கொடுத்து எப்படியாவது புதிய appஐ பயன்படுத்தி பார்த்துவிடவேண்டும் என தவறு செய்து விடுகிறோம். அப்படி allow கொடுக்கும் போது தான் சில appகள் நம் phoneல் இருக்கும் கேமரா மற்றும் மைக் போன்றவற்றை பயன்படுத்த நமக்கே தெரியாமல் நம்மிடமே அனுமதி பெற்று விடுகின்றன. சில முக்கியமான filesஐ மறைத்து வைப்பதற்கு vault



என சில appsஐ நம்பி download செய்யும் போது அதுவே நம் கேமராவை control செய்ய ஆரம்பித்துவிடுகிறது. சில game appகள் கூட அப்படி நம்முடைய கேமராவை control செய்கிறதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உங்களின் மொபைல் கேமரா மூலம் உங்களை வேறு ஒருவர் உளவு பார்க்க முடியும். அதுமட்டுமல்லாமல் தனிநபர்களின் தகவல்களையும் (Data) அவர்களால் திருட முடியும். சரி ஒரு வேளை உங்கள் கேமரா அல்லது மைக் உங்களுக்கு தெரியாமல் பயன்படுத்தப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம், அதை எப்படி கண்டுபிடிப்பது என நீங்கள் அறியாமல் இருந்திருந்தால் இந்த கட்டுரை உங்களுக்கு பெரும் உதவியாக அமையப்போகிறது.

உங்கள் மொபைல் போனை ஒருமுறை ஹேக் செய்துவிட்டால், எங்கிருந்து வேண்டுமானாலும் அந்த ஹேக்கரால் உங்களின் கேமராவை on அல்லது off செய்ய முடியும். மைக்ரோபோன் மூலம் உங்களின் உரையாடல்களை கேட்க முடியும். புகைப்படம் அல்லது வீடியோ பதிவும் கூட செய்ய முடியும். இதுபோன்ற விஷயங்கள் உங்களுக்கு கவலையளிப்பதாக நீங்கள் நினைத்தால், உங்களை உளவு பார்ப்பதை உங்களால் தடுக்க முடியும்.





உங்கள் கேமரா on ஆகும்போதெல்லாம் செல்போனின் பின்புறம் அல்லது முன்புறத்தில் வித்தியாசமாக லைட் எரியும். அல்லது கேமராவின் செயல்பாடுகளைக் கொண்டு நீங்கள் அறிந்து கொள்ளலாம். சில செயலிகளுக்கு கேமராவின் அனுமதி தேவை இருக்காது. எனவே செட்டிங்ஸில் சென்று அத்தியாவசியமான செயலிகளைத் தவிர்த்து மற்ற செயலிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் CAMERA PERMISSIONஐ off செய்யுங்கள். இதற்கு ANDROID ஃபோனில் SETTINGS → SECURITY AND PRIVACY → PERMISSION MANAGER → CAMERA என்ற பகுதிக்கு சென்று பார்த்தால் அதில் எந்த எந்த Appகள் கேமராவை பயன்படுத்துகின்றன என்னும் தகவல் இருக்கும். அதிலேயே நாம் தேவையற்ற Appகளுக்கு கேமரா பயன்பாட்டை நிறுத்தி வைத்துக்கொள்ளலாம். மேலும் நீங்கள் தேவையற்ற செயலிகளை பதிவிறக்கம் செய்வதையும் தவிர்க்க வேண்டும்.

இப்போதுள்ள மொபைல் போன்களில் கேமரா அல்லது மைக் நாம் பயன்படுத்தும் போது DISPLAYவில் ஒரு ஓரத்தில் பச்சை நிற லைட் எரியும். அப்போது நீங்கள் உங்கள் மொபைல் போனின் கேமரா அல்லது மைக் பயன்பாட்டில் உள்ளது என அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் நீங்கள் அறியாத நேரத்தில் உங்கள் மொபைல் போன் கேமரா பயன்படுத்தப்பட்டால் நீங்கள் எளிதில் கண்டறிந்து தேவையற்ற பிரச்சனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

**பிரியமான வாலிபர்களே, ஒருவேளை உங்களின் கைபேசியின் மூலம் யாரோ ஒருவர் உங்களை கண்காணித்தாலும் கண்காணிக்காவிட்டாலும் “கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்” (சங் 121:7) என்னும் வேத வசனத்தின்படி, அவர் உங்களை நிச்சயமாகவே எல்லா ஆபத்துகளுக்கும், தீமைகளுக்கும் விலக்கி காத்துக்கொள்வார். ஆனால் நாம் பிசாசு விரிக்கும் தந்திர வலைகளில் சிக்காமல் எச்சரிப்பாய் இருக்க வேண்டும். OK நண்பர்களே இந்தக் கட்டுரை உங்களுக்கு உபயோகமாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். மீண்டும் வேறு ஒரு TECH தகவலுடன் அடுத்த மாதம் சந்திக்கிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

வேதாகம கதாபாத்திரம்: சுமா

# சிப்பிக்குள் முத்து



**இளம் நெஞ்சங்களுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்கள். இம்மாதம் சிப்பிக்குள் முத்து என்ற தொடரில் நாம் பார்க்க இருக்கும் நபர் ஒநேசிமு.**


## ஒநேசிமு

ஒநேசிமு என்பவன் ஒரு அடிமை. ஒநேசிமு என்ற பெயரின் அர்த்தம் ''பயன்படுபவன்''. இவரைப் பற்றி கொலோசெயர் 4:9ம் வசனத்திலும், அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனுக்கு எழுதின நிருபத்தில் 1ம் அதிகாரம் 10ம் வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. கொலேசேப் பட்டணத்தில் வசித்து வந்த பிலேமோன் என்ற மனிதருக்கு அடிமையாக இருந்தவர் ஒநேசிமு. அப்போஸ்தலனாகிய பவுலின் பிரசங்கத்தினால் பிலேமோன் இரட்சிக்கப்பட்டார். இந்நிலையில் ஒநேசிமு பிலேமோன் வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு கொலேசே பட்டணத்தில் இருந்து ரோமாபுரிக்கு ஓடி வந்து விட்டார். அச்சமயத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் வீட்டுச் சிறையில் இருந்தார். எப்படியோ ஒநேசிமு பவுலை சந்தித்து கிறிஸ்துவின் அன்பை உணர்ந்துக் கொண்டார்.

ஒநேசிமு கிறிஸ்துவை அறிவதற்கு முன், பிரயோஜனமில்லாத வேலைக்காரன், அடிமை, அநியாயக்காரன், கடன்பட்டவன். ஆனால் கிறிஸ்துவை அறிந்த பின் ஒநேசிமு 'அப்போஸ்தலனாகிய பவுல் பெற்ற மகன், பிரயோஜனமுள்ளவன், பவுலின் உள்ளம் போல் இருக்கிறவன், பிரியமான சகோதரன்' போன்ற பெயர்களை பெற்று வேறு மனிதனாய் மாறினான். அப்போஸ்தலனாகிய பவுலின் பிரசங்கமும், தேவனுடைய அன்பும் ஒநேசிமுவை சாட்சியாக மாற்றியது. இதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் ஒநேசிமுக்காக ஒரு கடிதம் எழுதி அதை அவன் கையில் கொடுத்து பிலேமோனுக்கு கொடுக்கச் சொல்கிறார். அதுதான் பிலேமோன் நிருபம். இன்று பிலேமோன் நிருபம் நம் கைகளில் இருப்பதற்கு முக்கிய காரணம் ஒநேசிமு தான்.


**இதை வாசித்துக் கொண்டிருக்கும் இளம் நெஞ்சங்களே, தேவனுடைய அன்பு ஒரு மனிதனை எப்படி மாற்றி உள்ளது பாருங்கள். கிறிஸ்துவை அறிவதற்கு முன் இருந்த ஒநேசிமுவின் வாழ்க்கை வெறுக்கப்பட்ட வாழ்க்கை. ஆனால் கிறிஸ்துவின் அன்பு அவரை ஊழியக்காரனாக மாற்றி உள்ளது. அவரால் இன்று நமக்கு பிலேமோன் நிருபம் கிடைத்துள்ளது. உங்கள் வாழ்க்கை எப்படி உள்ளது? ஒருவேளை கிறிஸ்துவை அறிந்த பின்னும் மாறவில்லையென்றால், இன்றே ஒநேசிமுவைப் போல மாறி விடுங்கள். இயேசு கிறிஸ்துவுக்காக கனி கொடுங்கள்! பயன்படுங்கள்!**

# கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்தவர்கள்...



## ஆபிரகாம்


ஆபிரகாமின் சரீரம் செத்ததாயிருந்த போதும், சாராளுடைய கர்ப்பம் செயலற்றதாயிருந்த போதும் ஆபிரகாம் தனது நம்பிக்கையில் தளராமல் உறுதியாயிருந்தார். தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை விசுவாசித்தார் (ரோமர் 4:18). ஆபிரகாம் 25ஆண்டுகள் நம்பிக்கையோடு காத்திருந்து, கர்த்தரிடத்தில் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், வேதாகம சரித்திரத்தில் நீங்காத இடமும் பெற்றார்.



## எசேக்கியா இராஜா

''அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை'' (2இரா-18:5). அசீரியா இராஜா தனது தளபதி ரப்சாக்கே வாயிலாக, ''நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?'' என்றும் ''எருசலேம் அசீரிய மன்னனின் கையில் ஒப்புவிக்கப்பட மாட்டாது என்று கூறும் உன் கடவுளை நம்பி ஏமாந்துவிடாதே' என்றும் எசேக்கியா இராஜாவிற்கு சொல்லி அனுப்பினான். எசேக்கியா இராஜா தேவன்மேல் வைத்திருந்த அந்த உறுதியான நம்பிக்கைக்கு சோதனை வந்தபோதும் அந்த நம்பிக்கையை விடவில்லை.

## தாவீது



தாவீது கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, அவரை நிந்தித்த கோலியாத்திற்கு விரோதமாக யுத்தத்திற்கு எழும்பினான். ஆனால் கோலியாத்தோ தன் மாம்சபெலனை நம்பினான். தான் 9 அடி உயரமுடையவன் என்பதை எண்ணி மேட்டிமைக் கொண்டான். தன்னுடைய ஈட்டியையும், பட்டயத்தையும் நம்பினான். தாவீதோ குள்ளன், இளைஞன் என்று கண்டு அவனை நிந்தித்தான். ஆனால் கடைசியில் தாவீதின் கையினால் மரித்துப் போய்விட்டான். கர்த்தரை நம்பிக்கையாய் வைக்கும்போது வெற்றி நிச்சயம்.
(1 சாமுவேல் 17-வது அதிகாரம்)



## ஜார்ஜ் முல்லர்

அநேக அனாதை இல்லங்களை உருவாக்கி கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து நடத்தி வந்தார். ஒரு நாள் காலை உணவிற்கு உணவு ஏதும் இல்லை. ஏதாவது வாங்க வேண்டுமென்றாலும் கையில் பணமும் இல்லை. எல்லா தட்டுகளும், டம்ளர்களும் காலியாக இருந்தன. பிள்ளைகளுக்கு காலை உணவிற்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கும்போது, எல்லாரையும் அமரச் செய்து, நீர் எங்களுக்கு கொடுக்க இருக்கும் உணவிற்காக நன்றி' ஆமென் என்றுச் சொல்லி ஜெபித்து முடிப்பதற்குள் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கதவை திறந்தபோது, ரொட்டிகளைச் செய்பவர் நின்றிருந்தார். அவர், 'எனக்கு இரவெல்லாம் தூக்கமில்லை, உங்களுக்கு சாப்பிட காலையில் ஒன்றுமில்லை என்று எனக்கு தோன்றிற்று. ஆகவே காலை 2 மணிக்கு எழுந்து உங்களுக்கென்று புதியதாக இந்த ரொட்டிகளைச் செய்தேன்' என்று தேவையான ரொட்டிகளை அவரிடம் கொடுத்தார். அதற்கு நன்றி சொல்லி முடிப்பதற்குள் மறுபடியும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு, திறந்து பார்த்தல் பால் வண்டி இந்த அனாதை இல்லத்தின் முன்பாக உடைந்துப் போய் விட்டது. அதை சரிசெய்ய வேண்டுமென்றால், அதிலிருந்து எல்லா பாலையும் வெளியேற்றவேண்டும். ஆகவே இந்தப் பாலை வாங்கிக் கொள்கிறீர்களா என்று கேட்டாராம். 'அன்று அருமையான காலை உணவு எங்களுக்கு கிடைத்தது' என்று முல்லர் கூறினாராம். கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்கும்போது அவர் நம்மை ஒவ்வொரு நாளும் போஷிப்பார்.



# Achievers 2024



# தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை!





கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சங்கரன்கோயில், காங்கேயம், திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர், கோவில்பட்டி, சிவகாசி, பாண்டிச்சேரி, ஜெபமலை, நாமக்கல், பெங்களூர் ஆகிய பகுதிகளில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது.

தேர்வு பயத்தோடு, மனக்குழப்பதோடு வந்திருந்த அநேக மாணவ மாணவியர் குழப்பங்கள் நீங்கி ‘‘தன்னம்பிக்கையோடு தேர்வை எழுதுவோம்’’ என்ற தீர்மானத்துடன் கடந்து சென்றனர். இக்கூடுகைகளில் **சுமார் 2,588** மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.

இதில் இயேசு விடுவிக்கிறார் ஊழியர்களை கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!!




























சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி - 3






Hello நண்பர்களே! இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். என்னங்க இந்த லெந்து நாட்களெல்லாம் எப்படி போச்சு? இந்த 40 நாட்களும் ஒரு சில காரியங்களை ஆண்டவருக்கென்று விட்டுக்கொடுக்கவும், நம் ஆவிக்குரிய மனிதனின் வளர்ச்சிக்காக உபவாசிக்கவும், நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் பட்டப் பாடுகளை தியானிக்கவும் ஒப்புகொடுத்திருப்பீங்க. இவை இந்த 40 நாட்களோடு நின்று விடாமல் நம் வாழ்நாள் முழுவதும் நீடித்தால் நம்மால் ஆவிக்குரிய உலகில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

அவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு வீரமுள்ள வாலிபரான தீமோத்தேயுவைப் பற்றி தான் நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டு வருகிறோம். கடந்த மாதத் தொடரில் தீமோத்தேயுவின் சீஷத்துவத்தையும், அவரின் நற்சாட்சியைப் பற்றியும் பார்த்தோம். இந்த மாதம் நாம் அவரைப் பற்றி என்ன பார்க்கப்போகிறோம் என்று any guess? Okay, வாங்க friends தொடருக்குள் போகலாம்.

## ஊழிய அழைப்பு!

இரண்டாவது முறையாக ஊழியத்தின் நிமித்தமாக லீஸ்திராவிற்கு சென்ற பவுல் தீமோத்தேயுவின் நற்சாட்சியையும், விசுவாசத்தையும், ஊழிய வாஞ்சையையும் கண்டு அவரை தம்முடன் ஊழியத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார் (அப்.16:3). அதை பவுல் தீமோத்தேயுவிற்கு தெரியப்படுத்தினபொழுது தீமோத்தேயுவின் பதில் என்னவாக இருந்திருக்கும்?

தீமோத்தேயு பவுலின் ஊழியங்களைப் பற்றி நன்றாக அறிந்தவர்; அதுமட்டுமா? பவுல் முதல் முறையாக லிஸ்தீராவில் சுவிஷேசம் அறிவிக்க வந்தபோது, தன்னுடைய நாட்டாரால் கல்லெறியப்பட்டதையும் கண்டவர். அப்படி இருக்கும் போது பாடுகள் நிறைந்த பாதையில் செல்ல அந்த வாலிபன் எடுத்த முடிவு தான்



என்ன? ஒருவேளை இவை எல்லாவற்ரையும் மனதில் கொண்டு தயங்கியிருப்பாரோ? அதுதாங்க இல்லை. பவுல் தன்னுடன் ஊழியத்திற்கு தீமோத்தேயுவை அழைத்ததுமே, தன்னை இரட்சித்த அந்த உன்னதருக்கு ஊழியம் செய்ய அந்த இளைஞனின் மனம் உற்சாகமாய் வெகுண்டு எழுந்தது. தன் வீடு, நாடு, பெற்றோர் என எல்லாவற்றையும் விட்டு ஊழியத்திற்கு செல்ல, சற்றும் தயங்காது தன் சம்மதத்தை தெரிவித்தார் இருபதே வயதான அந்த வாலிபன்.



தீமோத்தேயுவின் தகப்பனார் ஒரு கிரேக்கர் என்று அங்கிருந்த யூதர் அனைவரும் அறிந்திருந்தபடியால் இது ஒருவேளை அவருடைய ஊழியத்திற்கு இடறல் உண்டாக்கலாம் என்று கருதிய பவுல், தீமோத்தேயுவை விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளும்படி செய்தார் (அப் 16:3). பிறகு, பவுலும் லீஸ்திரா சபை மூப்பர்களும் தீமோத்தேயுவை நற்செய்தி பணி ஊழியத்திற்கு மிஷனரியாக பிரதிஷ்டை செய்தனர். தீமோத்தேயு தன் வீட்டாரிடமும், தன் சபை மக்களிடமும் விடை பெற்றுக்கொண்டு, தனது ஊழியக் களத்தை நோக்கி பவுலுடன் அடியெடுத்து வைத்தார். தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலின் குழுவினரோடு சேர்ந்து கொண்ட பிறகு அவர்கள் பிரிகியா, கலாத்தியா போன்ற நாடுகளில் நற்செய்தி அறிவித்துவிட்டு, துரோவாவிற்கு வந்தார்கள். இங்கு வைத்தியரான லூக்காவும் அவருடன் சேர்ந்துகொண்டார். இவர்கள் சென்ற இடமெங்கும் சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின (அப் 16:5). சபைகளில் இப்படிப்பட்ட ஆவிக்குரிய மாற்றங்களைக் கண்ட தீமோத்தேயுவின் உள்ளம் சந்தோஷத்தால் பொங்கியது.



அன்பார்ந்த என் வாலிப நண்பர்களே, ஒருவேளை ஆண்டவர் நம்மை ஊழியத்திற்கென்று அழைத்தால் நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? இந்த வைராக்கியமுள்ள வாலிபனாகிய தீமோத்தேயுவைப் போல உடனே எல்லாவற்றையும் விட்டு விட்டு, அழைத்த அழைப்பை நோக்கி வீர நடை எடுத்து வைக்க நீங்கள் readyயா? முழு நேரமாய் ஊழியம் செய்து தான் இயேசுவை அறிவிக்க வேண்டுமென்ற கட்டாயத்தை நம் முன் ஆண்டவர் வைக்கவில்லை. நாம் வசிக்கும், படிக்கும், வேலை செய்யும் இடங்களில் கூட நாம் ஒரு நற்செய்தி பணியாளராக இருக்கலாமே. ஆனால்,நாம் இயேசுவைப் பற்றி கூறினால் பிறர் நம்மை என்ன நினைப்பார்கள் என்று தயங்குகிறோமல்லவா? இயல்பிலேயே பயந்த சுபாவம் கொண்ட தீமோத்தேயு எதற்கும் தயங்காது, பாடுகளுக்கு அஞ்சாது தன்னை அர்ப்பணித்ததால், தன் முதல் ஊழிய பயணத்திலேயே, அவர்கள் செய்த ஊழியத்தின் விளைவாக சபைகள் விசுவாசத்தில் வளர்ந்து பெருகுவதைக் கண்டார். இன்றைக்கும் இத்தகைய ஆவிக்குரிய மாற்றங்களை சபைகளில் உங்களைக் கொண்டு ஏற்படுத்தவே ஆண்டவருடைய கண்கள் உங்களை நோக்கி இருக்கிறது. சபைகளும் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றன. வாருங்கள் எழும்புவோம்...! செயல்படுவோம்..!

- வீர சகாப்தம் தொடரும்...

சாதனை: சுடரா

# சிவப்பு கம்பளம்



**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் வாழ்க்கைப் பயணம் சிறப்பானதாக அமைந்திடாது. சிறப்பாக இல்லாத வாழ்க்கையை மிகச் சிறப்பாக மாற்றுபவர்களே சாதனையாளர்கள். அப்படி தன் வாழ்க்கையை சிறப்பாக மாற்றிய ஒரு சாதனையாளரின் வாழ்க்கை இதோ உங்கள் முன்.**

கொல்கத்தாவில் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர் ஆசிப் ரஹ்மான். தன்னுடைய கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு நல்ல வேலைக்காக அநேக இடங்களில் வேலைத் தேடி அலைந்தார். கொல்கத்தாவின் பார்க் தெருவிலுள்ள கம்பள விரிப்பு கடையின் மீது ஆசீப்-ன் கவனம் சென்றது. அந்தக் கடையின் வெளியில் நின்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ட கம்பள விரிப்பு கடை உரிமையாளர் ஆசிப்பை கூப்பிட்டுப் பேசி அவருக்கு முதல் வேலையைக் கொடுத்தார். கடையில் பணியாளராக சேர்ந்த ஆசிப் ஆரம்பத்தில் விற்பனை பிரதிநிதியாக வீடு வீடாக சென்று தரைவிரிப்புகளை விற்பனை செய்யும்படி கேட்கப்பட்டார். இதனால் ஆசிஃப் உடல் மற்றும் உளவியல் உட்பட பல சவால்களை எதிர்கொண்டார். ஆனால் அவர் மனம்தளராது தொடர்ந்து கற்றுக்கொண்டு கம்பள வியாபாரத்தில் நிபுணரானார்.

2003ஆம் ஆண்டில், நியூயார்க்கை தளமாகக் கொண்ட கார்பெட் நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு ஆசிஃப்புக்கு கிடைத்தது. அந்த நிறுவனத்தில் 8 ஆண்டுகள் பணியாற்றினார். இதன் போது, சர்வதேச அணுகுமுறையுடன் கார்பெட் தொழிலில் தேர்ச்சி பெற்ற ஆசிஃப், நல்ல வணிகத் தொடர்புகளையும் ஏற்படுத்தினார். இதன்பிறகு தனது சொந்த தொழிலைத் தொடங்க முடிவு செய்தார். பின்னர் தன்னிடம் இருந்த 35 இலட்சத்தைக் கொண்டு '**Insigne Carpets**' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார்.

என்ன தடைகள் வந்தாலும் அதை எதிர்கொள்ள ஆசீப் தயாராக இருந்தார். துறையில் தனக்கு இருந்த மதிப்பும், தொடர்புகளும் இந்தத் தடைகளை வெல்ல உதவியது என்கிறார் ஆசிப். சில நாட்களுக்குப் பிறகு நிறுவனம் தொடங்கியவுடன், மும்பை தாஜ்மஹால் பேலஸ் ஹோட்டலில் இருந்து முதல் ஆர்டர் கிடைத்தது. இது அவருக்கு ஒரு பெரிய சாதனை. மீண்டும் மெல்ல மெல்ல முன்னேறத் தொடங்கி நிறுவனம் பல நாடுகளுக்கு முன்னேறிச் சென்றது. நிறுவனம் நாடு முழுவதும் உள்ள உள்ளூர் கைவினைஞர்களின் திறமையைப் பயன்படுத்தி சிறந்த வேலையை முன்னோக்கி சென்றது.

இந்த விடாமுயற்சியின் பலனாக இன்று நிறுவனம் பொழுதுபோக்கு, மருத்துவம், குடியிருப்பு என பல்வேறு

துறைகளில் பரந்த செயல்பாடுகளைக் கொண்டு இருக்கிறது. ஆசீப்பின் நிறுவனம் La Samaritaine (Paris), The Pierre (New york), Wynn Casino (Las ragas), Salalah international Airport (Oman) ஆகிய இடங்களுக்கு கம்பள விரிப்புகளை தயாரித்து அளித்திருக்கிறது.

Insigneஇன் மிகச்சிறந்த திட்டங்களில் சில அபுதாபியின் பட்டத்து இளவரசரின் தனிப்படகின் தரைவிரிப்பு அடங்கும். அவர்களின் வாடிக்கையாளர்களில் Google, Luis Vuitton போன்ற நிறுவனங்களும் அடங்கும். இன்று, Insigne Carpets உலகம் முழுவதும் 13 வடிவமைப்பாளர்கள் மற்றும் 18 அலுவலகங்களைக் கொண்ட குழுவைக் கொண்டுள்ளது. இந்தியா மற்றும் சீனாவில் உற்பத்தி தளங்களைக் கொண்டுள்ளது.



இதை வாசிக்கும் அன்பான வாலிபர்களே, இந்தப் பூமியில் நாம் வாழும் வாழ்க்கை எளிதல்ல. நாம் சாதனையாளராக சிவப்பு கம்பளத்தில் நடக்க வேண்டும் என்றால் முதலாவது கரடான பாதையில் நடக்க வேண்டும். நடக்கிறது மட்டுமல்ல, அந்த பாதையை மேற்கொண்டு ஆசீப் போல போராடி வெற்றிப் பாதையை உருவாக்க வேண்டும். தயாராக இருங்கள், சிவப்பு கம்பளத்தில் நடக்க..!


நாலுமாவடியில்....

Revival IGNITERS CAMP

எழுப்புதலைப் பரவச் செய்வோர் பயிற்சி முகாம்...

வரப்போகிற எழுப்புதலில் எழும்பி பிரகாசிக்க, தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

வயது : 15 வயது முதல் 30 வயதுவரை (ஆண், பெண் இருபாலரும்)

நாள்: மே 3 வெள்ளி காலை 9 மணி முதல்
மே 5 ஞாயிறு மதியம் 1 மணி வரை
(3 நாட்கள்)

இடம்:
தேவனுடைய கூடாரம்,
நாலுமாவடி

பதிவுக் கட்டணம்:
ரூ. 200/-
மட்டுமே

பயிற்சியாளர்கள் :
சகோ. மோகன் சி. லாசரஸ்,
சகோ. வின்சென்ட் செல்வக்குமார்

பதிவு செய்ய : revival.jesusredeems.com என்ற இணையதளத்தில் சென்று பதிவு செய்யலாம்.

குறிப்பு: ஏற்கெனவே வாலிபர்களுக்கென்று நடைபெற்ற 3 முகாம்களில் கலந்துகொண்ட வாலிபர்கள் கலந்துகொள்ள அனுமதி இல்லை.

தேர்ந்தெடுக்கப்படும் வாலிப சகோதர சகோதரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தொடர்புக்கு : 9750955547 / 04639-353535

பதிவு செய்ய கடைசி நாள் : ஏப்ரல் 30

# Revival IGNiTERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## Monthly Fellowship

## EVERY 1st SUNDAY (7th April)

### MUMBAI - DHARAVI (5PM - 7:30PM)
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

### TIRUPUR (4PM - 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

### TUTICORIN (3PM - 5:30PM)
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

### TIRUPATI (3PM)
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (13th April)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (14th April)

### SANKARANKOIL (2:30PM - 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

### MUMBAI - BHANDUP (4PM - 6:30PM)
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

### KOVILPATTI (3PM -5:30PM)
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

### THENI (2:30PM - 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:30PM)
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

### CHENGALPET (3PM - 5:30PM)
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (21st April)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM - 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service,
Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (27th April)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (28th April)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM - 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




ON SUNDAY 28th April
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

# ஜெபக் கையேடு

ஏப்ரல் 2024

ஜெபம்: பெனிட்டா

**1** புற்றுநோயால் இந்தியாவில் ஓராண்டில் 9 லட்சம் பேர் மரணமடைந்துள்ளனர். இனியும் எந்த மரணமும் சம்பவிக்காதபடி தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

**2** புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 14.1 லட்சம் பேர் சுகம் பெறவும், இனி யாரையும் இந்த கிருமி தாக்காதபடிக்கும் ஜெபியுங்கள்.




**3** புற்றுநோய் என்ற கிருமி நம் தேசத்தை விட்டு முற்றிலும் வெளியேறும்படி ஜெபியுங்கள்.

**4** புற்றுநோய் வராமல் தடுக்கப்பட தடுப்பூசிகள் கண்டுபிடிக்கவும், சிகிச்சை பெற்று வருகிறவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் துரிதமாக செய்யப்படவும் ஜெபியுங்கள்.

**5** நாடு முழுவதும் ஏற்படுத்தவுள்ள சுமார் 10 லட்சம் வாக்குச்சாவடிகளிலும் தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

**6** இந்தியாவில் உள்ள சுமார் 96 கோடி வாக்காளர்களும் தங்கள் தொகுதிகளில் சரியான நபரைத் தேர்ந்தெடுக்க ஜெபியுங்கள்.

**7** நாடு முழுவதும் பயன்படுத்தவுள்ள சுமார் 30 லட்சம் மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீதும் இயேசுவின் இரத்தத்தை தெளித்து ஜெபியுங்கள்.

**8** வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபியுங்கள்.

**9** செய்தி, ஊடகங்கள் தவறான கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு ஜனங்களை குழப்பாத படிக்கு ஜெபியுங்கள்.

**10** கள்ள ஓட்டுகள் போடாமல் தடுக்கப்பட தேர்தல் ஆணையம் மற்றும் காவல்துறை விழிப்புடன் செயல்பட ஜெபியுங்கள்.

**11** இந்தியா முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேர்தல் பிரச்சாரங்கள் சமாதானமாக நடைபெற ஜெபியுங்கள்.

**12** அமலாக்கத்துறையில் (E.D.) பணிபுரியும் 2100 பணியாளர்களுக்குள்ளும் தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

**13** அமலாக்கத்துறையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் நேர்மையாகவும், உண்மையாகவும் செயல்பட ஜெபியுங்கள்.



**14** இந்திய தேசத்தின் பொருளாதாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**15** வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட ஜெபியுங்கள்.

**16** இந்திய தேசத்தில் உள்ள ஏழை-எளிய ஜனங்களின் வாழ்வாதாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**17** திருச்சபைகள் வேத வசனத்தின்படி நடக்கவும், அன்பு, தாழ்மை மற்றும் வல்லமையை தரித்து கொள்ளவும் ஜெபியுங்கள்.

**18** சபைகளுக்கு எதிராக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும், சபைகள் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.

**19** எழுப்புதலில் 5 விதமான ஊழியர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**20** சபைகளுக்குள் காணப்படும் பாரம்பரியங்கள் முற்றிலும் ஒழியவும், ஜாதி, வரதட்சணை பாவங்கள் முற்றிலும் மாறவும் ஜெபியுங்கள்.

**21** எல்லா சபைகளிலும் எழுப்புதலுக்காகவும், தேசத்திற்காகவும் ஜெபிக்கிற ஜெப ஆவி ஊற்றப்பட ஜெபியுங்கள்.

**22** கள்ள உபதேசங்களினால் விசுவாசிகளை வஞ்சிக்கும்படி கிரியை செய்கிற சாத்தானின் தந்திரங்கள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.



**23** தேர்வு எழுதி முடிவுக்காக காத்திருக்கும் ஒவ்வொரு மாணவர்களின் கனவுகள் நிறைவேற ஜெபியுங்கள்.

**24** மாணவ, மாணவிகளை தற்கொலைக்கு தூண்டுகிற தற்கொலையின் ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.



**25** மாணவ, மாணவிகளின் மேல் அதிகப்படியான எதிர்பார்ப்புகளை வைத்து அவர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் பெற்றோர்களின் மனநிலை மாற ஜெபியுங்கள்.

**26** இந்தியாவில் அதிகரித்து வரும் கொலை குற்றங்கள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

**27** கொலை செய்யும் நோக்கத்தோடு இருக்கும் நபர்கள் விடுதலையாகவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**28** மாணவ, மாணவிகளை சீரழிக்கும் பாவ அடிமைத்தனங்கள் முற்றிலும் ஒழியவும், பாவத்தைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

**29** இந்தியாவில் உள்ள விவசாயிகளின் பாதுகாப்பிற்காகவும், விவசாய நிலங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**30** விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரவும், அவர்களுடைய தேவைகளை அரசு நிவிர்த்தி செய்து, விவசாயிகளின் தற்கொலைகள் தடுத்து நிறுத்தப்படவும் ஜெபியுங்கள்.






# இரயில் பயணம்

தகவல்: காலேப்

## சென்னை நுங்கம்பாக்கம் இரயில் நிலையம்...



விக்கியும், ஆண்டருவும் ரயிலில் பேசிக் கொண்டே ஏறினர். ஆண்டருவின் கைபேசிக்கு தொடர்ந்து ஒரே நம்பரிலிருந்து அழைப்பு வந்து கொண்டேயிருந்தது.

ஆண்ட்ரு அந்த அழைப்பை எடுக்காமல் கட் பண்ணிக் கொண்டே இருப்பதை பார்த்த விக்கி...

**விக்கி:** ஆண்ட்ரு... அந்த போனை எடு டா... எவ்வளவு நேரமா அடிக்குது.

**ஆண்ட்ரு:** டேய்... அது விளம்பர call டா. தேர்தல் வருதுல ஒவ்வொரு கட்சியிலிருந்து வாக்குக்காக automated call வந்துக்கிட்டே இருக்கு.

**விக்கி:** ஆமா, ஆமா இந்த வருஷம் தேர்தல் இருக்குல...! மறந்து மறந்து போகுது. இந்த வருஷம் தேர்தலுக்கு ஊருக்கு போகணும்.

**ஆண்ட்ரு:** உனக்கு ஓட்டு சென்னைல தானே இருக்கு... நீ எதுக்கு ஊருக்குப் போற?

**விக்கி:** நான் இப்ப ஓட்டு போட போறேன்னு சொன்னனா? வேலையில ஒரே stressஆ இருக்கு, அதான் லீவ் போட்டுட்டு எங்கயாச்சும் போலாம்னு பிளான் பண்றேன். தேர்தல் வெள்ளி அல்லது திங்கள் வந்துச்சுனா நல்லா இருக்கும், 3 நாள் தொடர்ந்து லீவ் கிடைக்கும்.

**ஆண்ட்ரு** (கோபம் கலந்த வெறுப்போடு): விக்கி... வாக்களிப்பது நம்ம கடமை. எல்லா குடிமக்களும் வாக்களிப்பது தான் முக்கியம். நீ ஓட்டு போடலனா அந்த ஓட்டு வீணாகி விடுமே?

**விக்கி:** ஆமா, நான் ஒரு நபர் வாக்களிக்கலைன்னா என்ன மாற்றம் வந்திரப்போகுது, எந்த கட்சி வந்தாலும் நமக்கு நல்லதா செய்யப் போறாங்க. அட போடா நான் பிளான் பண்ணிட்டேன், நீயும் வேணா கூட வா.

**ஆண்ட்ரு:** அப்படியில்ல விக்கி, எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ இல்லையோ, அவங்க நல்லது செய்றாங்கலோ இல்லையோ, அதெல்லாம் இரண்டாவது. ஆனால் நாம் வாக்களித்தால் தான் கேள்வி கேட்க தகுதியானவர்களாக மாறுகிறோம்.



**விக்கி:** எங்க வீட்டுப் பக்கத்துல கூட ஓட்டு போட பணம் வாங்கி தான் ஓட்டு போடுறாங்க, அதுக்கு வாக்களிக்காமல் இருப்பதே நல்லது தான்.

**ஆண்ட்ரு:** ஓட்டுக்குப் பணம் வாங்குவது தவறு தான், அதேபோல நமக்கு வாக்குரிமை இருந்தும், வாக்களிக்காமல் இருப்பதும் தவறு தான். பொது மக்களாகிய நமக்கு இருக்கும் மிகப்பெரிய பொறுப்பும் உத்திரவாதமும் இந்த தேர்தல் தான். நாம வாக்களிக்கலைனா, நம்ம தேசத்துக்கு நாமே துரோகம் செய்றோம்னு அர்த்தம்.

**விக்கி** (ஆச்சரியத்தோடு): எப்பா ஆண்ட்ரு, நீயெல்லாம் தேர்தல் கமிஷன்ல இருக்க வேண்டிய ஆள், தெரியாம இங்க இருக்க. 2 நிமிஷத்துல என்ன தேச துரோகி லெவலுக்கு கொண்டு போய் நிறுத்திட்டியே டா!

**ஆண்ட்ரு** (சிரித்துக் கொண்டே): உன்ன திருத்த எனக்கு வேற வழி தெரியலடா?

**விக்கி:** ஆமா, நீ யாருக்கு ஓட்டு போட போற?

**ஆண்ட்ரு:** அது ரொம்ப சிம்பிள், நான் முதலாவது ஜெபம் பண்ணுவேன், எங்க தொகுதியில நிக்கிற வேட்பாளர்களில் குற்றப்பின்னணி இல்லாதவங்க, மக்கள் மத்தியில நல்ல பெயர் உள்ளவரான்னு பார்த்து விசாரித்து, தகுதியான வேட்பாளருக்கு என் வாக்கை செலுத்தலாம்னு இருக்கேன்.

**விக்கி:** இதுக்கே இவ்ளோ ரிசர்ச் பண்ணுவியா? சரி இந்த முறை நானும் நீ சொன்ன மாதிரி try பண்ணி பாக்குறேன்.

**ஆண்ட்ரு:** ‘Bibleல கூட இயேசு சொல்லியிருக்காரு....என்று சில வசனங்கள் சொல்ல ஆரம்பித்தவுடன்,

**விக்கி** (மைண்ட் வாயஸ்): அய்யோ Bibleல பத்தி பேச ஆரம்பிச்சுட்டானே... எப்படி தப்பிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அவன் இறங்கும் இடம் வந்தது.. அப்பாடா தப்பிச்சோம் என்று ஆண்ட்ருவிடம் விடைப்பெற்று சென்றான்.

**ஆண்ட்ரு** (மைண்ட வாயஸ்): இன்றைக்கு வேணும்னா நீ கேட்காமா தப்பிக்கலாம், ஆனால் எப்படியும் ஒரு நாள் நீயே தேடி வருவ என்று மனதில் சொல்லிக் கொண்டே தன் நண்பனுக்கு கை அசைத்து விடைபெற்றான்.

இவர்கள் இருவரின் உரையாடல்கள் தொடரும்...




# மும்பையில்... YOUTH PRAYER CONFERENCE



நாள் : ஏப்ரல் 7, ஞாயிற்று கிழமை

நேரம் : மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை

இடம்: Morning Star School,
அசோக் மில் காம்பவுண்ட், சீயோன் பந்த்ரா லிங்க் ரோடு
ஷஹீல் ஹோட்டல் எதிர்புறம், தாராவி, மும்பை

செய்தியும் ஜெபமும் : சகோ. சாம் ஜெபராஜ்

தொடர்புக்கு : 9004882470 | 9664050567 | 8082410410

# NISUIN BERIYTH

## (திருமண உடன்படிக்கை)

பகுதி - 3

தகவல்: வயலா

'சுய' தெரிந்துக் கொள்ளுதல் மற்றும் அதன் விளைவுகளை, லோத்தின் வாழ்க்கை சம்பவத்தின் மூலமாக கடந்த மாத இதழில் தியானித்தோம். மற்றுமொரு உதாரணமாக சிம்சோனையும், அவரது சுய தெரிந்துகொள்ளுதல் மற்றும் அதன் விளைவுகளையும் (நியாயாதிபதிகள் 13-16) இன்று தியானிப்போம்.



இஸ்ரவேலின் நியாயாதிபதிகளுள் ஒருவர் சிம்சோன். இவரது பிறப்பே விசேஷித்த விதமாக தேவதூதரால் முன்னறிவிக்கப்பட்டு இருந்தது. பிறப்பிலிருந்தே தேவனுக்கென்று நசரேய விரதம் கொண்டிருந்தவர். இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும் தேவசித்தத்தோடு பிறப்பிக்கப்பட்டவர். ஆனால் சிம்சோனோ தனது பிறப்பின் நோக்கம் மற்றும் அதன் மகத்துவத்தை சிந்தியாமல், யாரை அழிக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டாரோ, அந்த பெலிஸ்தியரிலிருந்து ஒரு பெண்ணையே தனக்கு வாழ்க்கைத் துணையாக கொள்ள வேண்டும் என்றார். சிம்சோனின் தாயும், தகப்பனுமோ, விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ள வேண்டியதென்ன? எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா? என்று தங்களது விருப்பமின்மையைத் தெரிவிக்கின்றனர். சிம்சோனோ தனது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. தேவ சித்தத்திற்கும், பெற்றோரின் விருப்பத்திற்கும் மாறாக, தனது சரீர அவயமாகிய 'கண்'ணுக்கு அதாவது சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பெலிஸ்தியரின் தேசத்திற்கு செல்கிறார். ஒன்றா? இரண்டா? பல பிரச்சனைகளையும், குழப்பங்களையும் சந்திக்க நேரிடுகிறது.

அவரது 'விடுகதை விளையாட்டு' விபரீதமாக 30 கொலைகளை செய்ய வைத்தது. எரிச்சல், கோபம், பழிவாங்குதல், சமாதானமின்மை என்று பல காரியங்கள் அவரது நிம்மதியை பறித்து விட்டது. ஆசைப்பட்ட பெண்ணையோ அடைய முடியவில்லை. காதலும் தோல்வி, சரி நட்பாவது ஆறுதல் தருமா என்றால் அதுவும் இல்லை. பெண்ணின் சிநேகத்தினால் எளிதாக எதிரிகளிடம் சிக்குண்டு 'கண்கள்' பறிபோகும் நிலை ஏற்பட்டது.

சற்று சிந்தித்து பாருங்கள், பெலிஸ்தியர் சிம்சோனுக்கு வலிக்கக் கூடாது என்றெண்ணி மயக்க ஊசி போட்டா கண்களை பிடுங்கியிருப்பார்கள்? பெலிஸ்தரோ எதிரிகள், சிம்சோனால் பல அழிவுகளை சந்தித்தவர்கள் சிம்சோன் மேல் உள்ள ஆத்திரத்தில், வலிக்க வலிக்க, துடிக்க துடிக்க அல்லவா கண்களை



பிடுங்கி இருப்பார்கள்! **“தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்”** (நீதி 30:17) என்பது போல, எந்த கண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தாரோ அதே கண்கள் தேவ சித்தத்திற்கு மாறாக சுயமாய் தீர்மானித்ததினிமித்தமும், பெற்றோரின் ஆலோசனையை அசட்டை பண்ணியதினிமித்தமும் கொடூரமாக பிடுங்கப்பட்டு, ஏதோ ஒரு பறவைக்கோ, விலங்குக்கோ உணவாகி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எத்தனை பரிதாபம்!

சிம்சோன், பின்னர் மனம் வருந்தி, நொறுங்குண்ட நெஞ்சத்தோடு தேவனிடம் மன்றாடி, இழந்த பெலனை மீண்டும் பெறுகிறார். தன் முழு பெலத்தோடு மிகுதியான பெலிஸ்தர்கள் கூடியிருந்த கட்டிடத்தின் தூண்களை அசைத்து, உயிரோடிருக்கையில் அவரால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும் சாகும் போது அவரால் கொல்லப்பட்டவர்கள் அதிகம் என்று சொல்லும் விதமாய் பல பெலிஸ்தியர்களை அழித்து, கட்டிடத்தின் இடிபாடுகளில் சிக்கித் தானும் அவர்களுடனே மடிகிறார். நன்றாய் கவனியுங்கள், சிம்சோன் படைக்கப்பட்ட நோக்கம் இங்கு தேவனால் நிறைவேற்றப்பட்டு விட்டது. சிம்சோனின் மனமாற்றத்தினால் அவரது பெயரும் பின்னர் விசுவாச வீரர் பட்டியலில் இடம் பெறுகிறது (எபி. 11).

ஆனால் சிம்சோனோ மனைவியையும் கண்டடையவில்லை, எந்த நன்மையையும் கண்டடையவில்லை. ‘சந்ததி’ ஆசீர்வாதத்தையும் பெறவில்லை. ஒருவேளை சிம்சோன் தேவனுக்கு பயந்து பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, தேவ ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்களுக்குள் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுத்து இருப்பாரானால், சிம்சோன் காலத்தில் இருந்த நியாயாபதிகளைப் போல சிம்சோனுக்கும் முப்பதோ, அறுபதோ குட்டி சிம்சோன்கள் பிறந்திருக்கலாம். அநேக குட்டி, குட்டி பெலவான்களால் இஸ்ரவேலர் தங்கள் எதிரிகள் மத்தியில் எவ்வளவு தைரியமாய், சுகமாய் வாழ்ந்திருப்பார்கள்?இப்படி எத்தனை அழிவுகள்...

### சிம்சோனின் சுய தெரிந்துகொள்ளுதலினால் ஏற்பட்ட விளைவுகள்

- இளவயதின் மனைவியோடு மகிழ்ந்திருக்க வேண்டியவர் இளவயதில் அகால மரணம்!
- மாவீரனாய் வலம் வந்தவர் எதிரிகளுக்கு மாவரைத்தல்!
- காண்பவர் மனதை பதற வைக்கும்படி கழுதையின் தாடை எலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றவர், பகைஞரை மகிழ்விக்க குருடனாய், கோமாளியாய் வேடிக்கை காட்டுதல்!
- மனைவியாக நியமிக்கப்பட்டவளையும் அவளது தகப்பனையும் அக்கினிக்கு இரையாக்குதல்.
- 30 கொலைகள், 300 நரிகள் வாலோடு வாலில் அக்கினி பந்தம் கட்டப்பட்டு துன்புறுத்தப்படுதல்.
- பெலிஸ்தரின் வெள்ளாண்மை அழிக்கப்படுதல்.

**எத்தனை எதிர்மறையான சூழ்நிலைகள்....**

**அன்புடையீர், சுய தெரிந்துகொள்ளுதல் தேவையா? சிந்திப்பீர்!**

(தேவ சித்தத்தின்படி தெரிந்துக் கொள்ளுதல் அதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களோடு **NISUIN BERIYTH** தொடரும்)

மஹாராஷ்டிரா மாநிலம் - ஔரங்காபாத்தில்....

## வாலிபர் எழுப்புதல் கூடுகை

நாள் : ஏப்ரல் 6, சனிக் கிழமை
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

இடம் : Anand Mangal Karyalay, Dr. Ambedkar Chowk, Near Croma, Bajaj Nagar Waluj MIDC, Chhatrapati, Sambhaji Nagar, (Aurangabad)



செய்தியும் ஜெபமும்: சகோ. சாம் ஜெபராஜ்

தொடர்புக்கு : 9004882470 | 8082410410

எச்சரிப்பின் செய்தி: டேவிட்

# ளநிசா நரகம்!

பகுதி - 3

**Hello Friends** நம்மை நரகத்திற்கு கொண்டு போக பிசாசு பயன்படுத்தும் ஆயுதம் தான் பாவம். அதில் ஒரு ஆயுதமாகிய பாலியல் பாவங்களைக் குறித்து கடந்த மாதம் தெளிவாக அறிந்து கொண்டோம். எவையெல்லாம் பாலியல் பாவங்கள்? இந்த **sexual sins** சமுதாயத்தில் எவ்வளவு பெருகியிருக்கிறது? இந்த பாவங்கள் பெருகியிருக்கிறதற்கு காரணம் என்ன? இதன் பிறப்பிடம் எது? இந்த பாலியல் பாவத்தில் ஈடுபடுவதால் சரீரத்திலும், மனதிலும், குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஏற்படும் பாதிப்புகள் என்ன? இந்த பாவத்தை மேற்கொள்வது (ஜெயிப்பது) எப்படி? என்று அறிந்து கொண்டோம். இந்த மாதம் பிசாசு **use** பண்ணுகிற வேறொரு ஆயுதமாகிய பொருளாசையைக் குறித்து தெரிந்து கொள்ளப் போகிறோம்.

## பொருளாசை

பொருளாசை ஒரு பாவம். 'என்னது! பொருளாசை பாவமா?' இவ்வளவு நாளாக பொருளாசை ஒரு பாவம்னு தெரியாம போச்சே என்று நினைக்கிறீங்களா? ஒரு சிலர் ''பொருள் மேல் ஆசைப்படுவது எப்படி பாவமாகும்?'' என்று கேட்பார்கள். பொருளாசை பாவம்தான். நமக்கு எப்பவும் பைபிள் தான் **reference**. வேதம் என்ன சொல்கிறது என்று தான் நாம பார்க்கணும்.

**ஏசாயா 57:17**ம் வசனத்தில், 'பொருளாசை என்னும் அக்கிரமம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொருட்கள் மேல் ஆசைப்படுவது அக்கிரமம். அது பாவம். ''பொருளாசை, பொருளாசை என்று சொல்றீங்களே அப்படின்னா என்ன?'' சிலர் ஒரு பொருளை பார்த்து விட்டு, அதை எப்படியாவது வாங்க வேண்டும். 'அந்த பொருள் இல்லாமல் என்னால இருக்க முடியாது' என்று சொல்வார்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த பொருளுக்கு அடிமைப்பட்டார்கள் என்று அர்த்தம். எந்த ஒரு காரியம் உங்களை அடிமைப்படுத்துதோ அது பாவம். சிலருக்கு மொபைல்போன் மேல் ஆசை, போன் இல்லாம சாப்பிட மாட்டாங்க, தூங்கமாட்டாங்க. எந்த வேலையும் செய்ய மாட்டாங்க. சிலருக்கு **Gadgets** மேல் ஆசை; தேவைபடுதோ, தேவைப்படலையோ வாங்கி குவித்துக் கொண்டே இருப்பார்கள். இன்னும் சிலருக்கு **Bike, Car, Jewels, Dress etc.,** இப்படி நிறைய சொல்லிட்டே போகலாம். **கொலோ. 3:5**ம் வசனத்தில், 'விக்கிரகாராதனையான பொருளாசை' என்று சொல்லப் பட்டுள்ளது. நீங்கள் பொருளாசையுடையவர்களாய் இருந்தால், விக்கிரகாராதனை செய்கிறீர்கள் என்று அர்த்தம். கிரகம் – தேவன் நிற்கிற இடம், சில வார்த்தையில் ''வி'' சேர்த்தால் **Negative**ஆகி விடும். ''வி'' சேர்த்தால் விக்கிரகம். எது தேவனை பார்க்கக் கூடாதபடி தடுக்குதோ அது விக்கிரகம். பொருளாசை உங்களை தேவனை பார்க்கக் கூடாதபடி தடுப்பதால் அல்லது தேவனை விட்டு பிரிப்பதால், அது விக்கிரகம்; அதாவது பாவம்.

**மாற்கு 7:22, 23**ம் வசனத்தில், 'மனுஷனின் இருதயத்திலிருந்து புறப்படுகிற பொருளாசை அவனை தீட்டுப்படுத்தும்' என்று வேதம் சொல்லுகிறது. இன்றைக்கு ஒருசில அரசாங்க அதிகாரிகள், அதிகாரத்தில் இருப்பவர்கள் **Document**ல் ஒரு **Sign** போடுவதற்கு லஞ்சம் வாங்குகிறார்கள். சில நீதிபதிகள் லஞ்சம் வாங்கிக் கொண்டு நியாயத்தை புரட்டுகிறார்கள்.



காரணம், அவர்கள் இருதயத்தில் பொருளாசை இருக்கிறது. வேதத்தில் சாமுவேல் தீர்க்கதரிசியின் குமாரர்கள் பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள். ஒரு மனுஷனுக்குள் பொருளாசை வந்தால் அது அவனை லஞ்சம் வாங்க; ஊழல் செய்ய; நியாயத்தை மாற்ற தூண்டும்.

**“பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்”** (நீதி. 15:27). English – GNB Translationல, ‘If you try to make a profit dishonestly, you will get your family into trouble’ என்று எழுதியிருக்கிறது. வீட்டைக்கலைக்கிறான் என்றால் தன் வீட்டுக்கு பிரச்சனையை உண்டாக்குகிறான் என்று அர்த்தம்.

அதுமட்டுமல்லாமல் ‘பொருளாசைக்காரர்கள் மரணத்துக்கு பாத்திரவான்களாய் இருக்கிறார்கள்’ **(ரோமர் 1:29,32)**. பொருளாசை நம்மை மரணத்துக்கு நேராக இழுத்துச் செல்லும். சோதோம் கொமோரா தேசத்தை தேவன் அழிப்பதற்கு முன்பாக லோத்து குடும்பத்தை காப்பாற்றுவதற்காக தேவ தூதர்களை அனுப்பி அவர்களின் கைகளைப் பிடித்து தேசத்தை விட்டு வெளியே கொண்டு போய் விட்டு ‘பின்னிட்டு பாராதே’ என்று சொன்னார்கள். ஆனால் லோத்தின் மனைவியின் இருதயம் தேவன் பக்கம் இல்லாமல், விட்டு வந்த ஆடு, மாடு, கழுதை, சொத்தின் மேல்



இருந்தபடியினால் பின்பாக திரும்பிப் பார்த்து உப்புத்தூணாகி தன் காலத்துக்கு முன்பாக மரித்து போனாள்.

**நீதி. 1:19**ம் வசனம், ‘பொருளாசை மனிதனின் உயிரை வாங்கும்’ என்று கூறுகிறது. அதனால் தான் ‘‘பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்’’ ‘‘ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல’’ **(லூக்கா 12:15)** என்று வேதம் சொல்கிறது.

பாருங்கள், கேயாசி பொருளாசையினால் குஷ்டரோகியாய் மாறினான். அவன் சந்ததிக்கும் சாபத்தை சம்பாதித்துக் கொண்டான் **(2 இராஜா. 5:27)**. அனனியா சப்பிராள் பொருளாசையினால் பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொல்லி செத்துப் போனார்கள் **(அப். 5:5,10)**.

ஆனால் இந்த பொருளாசையை வெறுத்தால் நீண்டநாள் உயிர் வாழலாம் என்று வேதம் சொல்கிறது (நீதி. 28:16). பொருளாசை என்கிற பாவம் இந்த உலகத்தில் வாழும் போது மட்டும் நமக்கு பாதிப்பைக் கொண்டு வராது. நாம் மரித்த பிறகு நம் ஆத்துமாவை நரகத்திற்கு கொண்டு போய் விடும். பரலோக பாக்கியத்தை தடுத்து விடும். பொருளாசைக்காரர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று வேதம் சொல்கிறது **(1 கொரி. 6:10; எபே. 5:5)** நம் எதிராளியாகிய பிசாசு நமக்குள் பொருளாசையை கொடுத்து நைசாக நம்மை நரகத்துக்கு கொண்டு போக தீவிரமாக செயல்படுகிறான். வேதத்தில் தாவீது ராஜா **சங். 119:36**ம் வசனத்தில், ‘என் இருதயம் பொருளாசையை சாராமல், உமது சாட்சிகளை சாரும்படி செய்யும்’ என்று அழகான ஒரு ஜெபம் பண்ணுகிறார்.




**நீங்களும் இன்று என்னோடு இணைந்து ஜெபிக்கிறீர்களா? இயேசுவே, பொருளாசையைக் குறித்து தெளிவாக எனக்கு கற்றுக் கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். என் பொருளாசை பாவத்தை மன்னியும், உம்முடைய பரிசுத்த இரத்தத்தால் என் எண்ணங்களை கழுவும், இச்சையடக்கத்தை தாரும், இனி பொருளாசைக்கு இடம் கொடுத்து நரகத்திற்கு போய்விடாதபடி, என்னை பரிசுத்தமாக காத்துக் கொள்ளும். என் இருதயம் பொருளாசையை சாராமல், உமது சாட்சிகளை சாரும்படி செய்யும், ஆமென்!**

**Okay Friends. அடுத்த மாதம் நரகத்திற்கேதுவான வேறொரு பாவத்தைக் குறித்து தெரிந்து கொள்ளலாம்.**

# செய்திகள்!

## உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியாவின் பங்கை 30% ஆக உயர்த்த இலக்கு



உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு தற்போது 24 சதவீதமாக உள்ளது.

2030-ம் ஆண்டுக்குள் இதை 30 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான மனீஷ் ஷா தெரிவித்துள்ளார்.

உலக அளவில் மிகப் பெரிய பால் உற்பத்தி நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவில் தினமும் 23.5 கோடி டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இது உலகின் மொத்த பால் உற்பத்தியில் 24 சதவீதம் ஆகும். இந்நிலையில், இதை 30 சதவீதமாக உயர்த்த திட்டமிட்டுள்ளதாக மனீஷ் ஷா தெரிவித்துள்ளார். இது குறித்து மனீஷ் ஷா கூறியதாவது:

கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவின் பால் உற்பத்தி ஆண்டுக்கு 6 சதவீதம் அதிகரித்து உள்ளது. தற்போது உலகின் மொத்த பால் உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை இந்தியா வழங்குகிறது. 2030-ம் ஆண்டுக்குள் இதை மூன்றில் ஒரு பங்காக மாற்ற வேண்டும். இந்த இலக்கை அடைய நம் கால்நடைகளின் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது அவசியம்.

உலக அளவில் மிகப் பெரியபால் உற்பத்தி நாடாக இந்தியா இருந்தாலும், இந்திய கால்நடைகளின் பால் உற்பத்தித் திறன்வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் சற்று பின்தங்கியுள்ளது. இதை மேம்படுத்த, மத்திய அரசும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியமும் இணைந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.
- 04 மார்ச், 2024 இந்து தமிழ் திசை.

## கோதுமை உற்பத்தி 11.2 கோடி டன் எட்டும்



நடப்பு பயிர் ஆண்டில் கோதுமை உற்பத்தி இதுவரை இல்லாத அளவில் 11.2 கோடி டன்னை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஜூலை முதல் 2024 ஜூன் வரையிலான நடப்பு பயிர் ஆண்டில் முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்தி தொடர்பான புள்ளி விவரங்களை மத்திய வேளாண் அமைச்சகம் நேற்று வெளியிட்டது. அதன்படி, கோதுமை உற்பத்தி முந்தைய பயிர் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு பயிர் ஆண்டில் 1.32 சதவீதம் அதிகரித்து 11.2 கோடி டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

2022-23 நிதி ஆண்டில் கோதுமை உற்பத்தி 11.05 கோடி டன்னாகவும், 2021-22 பயிர் ஆண்டில் 10.77 கோடி டன்னாகவும் இருந்தது.
- 02 மார்ச், 2024 இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# குழந்தைகளுடன் விடுமுறையைக் கழிக்க சில டிப்ஸ்...

விடுமுறை எப்போது வரும் என்று ஆசையாய் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் குழந்தைகள். ஆனால், பெற்றோர் இந்த விடுமுறை நாட்களில் குட்டீஸை எப்படி சமாளிப்பது என்று யோசிக்கிறீர்களா? இதோ உங்களுக்காக சில Tips. Try பண்ணி பாருங்க
















- விடுமுறை விட்டவுடன் ஒவ்வொரு நாளையும் எப்படிக் கழிக்கலாம் என்ற அட்டவணையைக் குழந்தைகளோடு சேர்ந்து தயார் செய்துகொள்ளுங்கள். அடுத்த வருடத்திற்கான பாடத்திட்டம் புத்தகங்கள் அதற்காக முன்கூட்டியே ட்யூஷன் இவற்றை அறவே தவிர்ப்பது நல்லது.

- பெற்றோர் வாக்கிங் செல்லும் போது குழந்தைகளையும் அழைத்துச் செல்லுங்கள். வீட்டிற்கு வந்த பின் செய்தித்தாள்களையோ, பொது அறிவு புத்தகங்களையோப் படிக்கும் பழக்கத்திற்குள் அவர்களைக் கொண்டு வரலாம்.

- குழந்தைகளுடன் பகல் நேரத்தில் உங்களால் நேரம் கழிக்க முடியும் எனில், பக்கத்து வீட்டு குழந்தைகளோடு உங்கள் குழந்தைகளையும் விளையாடப் பழக்க வேண்டும். குழந்தைகள் விளையாடுகிறார்கள் எனத் தனியே விட்டுவிடாமல் அவர்களின் பாதுகாப்பிற்காக அவர்களின் அருகில் இருப்பது நல்லது.

- மதிய நேரம் 2 மணிநேர ஓய்வு கட்டாயம் குழந்தைகளுக்கு அவசியம். கண்ணை மூடித் தூங்க வேண்டும் என்ற அவசியமில்லை. அந்த நேரத்தில் நல்ல தகவல்களைக் கதைகளாகப் பகிரலாம்.

- மாலை நேரங்களில் அருகிலுள்ள பூங்கா / நூலகம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம். மேலும் நம் பாரம்பரிய பெருமைகளை விளக்கும் சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்லலாம்.

- ஆதரவற்றோர் இல்லம் மற்றும் மனநலம் குன்றியோர் காப்பகம் போன்ற இடங்களுங்கு அழைத்துச் செல்லலாம். தங்களுக்குக் கிடைத்த நல்ல வாழ்க்கை மற்றும் பெற்றோர் பற்றி குழந்தைகள் உணர்ந்து கொள்ள இது உதவும்.

- குழந்தைகளோடு நேரத்தைச் செலவிடும் போது கூடுமானவரை கைப்பேசி உபயோகத்தைப் பெற்றோர்கள் குறைப்பதோ அல்லது தவிர்ப்பதோ நல்லது. அதேபோன்று, குழந்தைகளின் கைகளிலும் கேட்ஜெட்களை கொடுப்பதைத் தவிர்த்து, நம் மரபு சார்ந்த விளையாட்டுகள் விளையாடக் குழந்தைகளை ஊக்கப்படுத்தவேண்டும்.

- குழந்தைக்கு ஆர்வம் இருக்கும் பட்சத்தில் உடலை வலுவாக்கும் உள் அரங்க விளையாட்டுகளில் அவர்களின் ஆர்வத்தை அறிந்துகொண்டு குழந்தைகளை சேர்த்து விடலாம்.

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 03 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

தேவன் எழுப்புதலில் வாலிபர்களை பயன்படுத்தவும், அவர்களுடைய வாழ்க்கையில் பரிசுத்தம், ஜெபம், தேவனோடுள்ள ஐக்கியத்தில் பெலப்படவும் மாவட்டங்கள் தோறும், தாலுக்காக்கள் தோறும் சென்று அவர்களை ஆயத்தப்படுத்துவதே இக்கூடுகையின் முக்கிய நோக்கம். கடந்த பிப்ரவரி மாதம் பள்ளிகொண்டான், வெள்ளகோவில் மற்றும் திருப்பத்தூர் பகுதிகளில் நடந்த கூடுகைகளில் சுமார் 3000 பேர் கலந்துகொண்டனர். அதோடு சுமார் 26,000 கைப்பிரதிகளையும் வாங்கிச் சென்று தங்கள் பகுதிகளில் ஊழியம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

